# பகுதி II

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | I |
| நாணய வெளியீடு | VIII |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | VIII |
| வங்கி மேற்பார்வை | XI |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | XIII |
| அபிவிருத்தி நிதி | XIV |
| கிராமியக் கொடுகடன் | XXIV |
| பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | XXIX |
| கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | XXX |
| ஊழியர் சேமநிதியம் | XXXI |
| செலாவணிக் கட்டுப்பாடு | XXXII |
| பொதுப் படுகடன் | XXXII |
| பிரேதச அலுவலகங்கள் - மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை | XXXVI |
| செயலகம் | XXXVII |
| தகவலும் வெளியீடுகளும் | XXXVII |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | XXXVIII |
| அளவீடுகளும் தரவுச் சேகரிப்புகளும் | XXXVIII |
| தரவு செய்முறைப்படுத்தல் | XL |
| பயிற்சி | XLI |
| முகாமைத்துவ கணக்காய்வு | XLI |
| பணிமனை | XLI |
| நலன்புரி | XLII |
| பாதுகாப்புப் பணிகள் | XLII |
| ஆளணி | XLII |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும்

1995 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 1,735,050 இலட்சமாக விளங்கி, முன்னைய ஆண்டினைவிட 11.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. 1995 திசெம்பர் 31 ஆம் நாளன்று உள்ளவாறான மத்திய வங்கியின் ஐந்தொகையும் 1995 திசெம்பர் 31 ஆம் நாளன்று உள்ளவாறான வங்கியின் இலாப நட்டக் கணக்கும் அட்டவணை 11.1 இல் காட்டப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பக்கத்தில், வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகள் ரூ. 952,820 இலட்சத்திலிருந்து ரூ. 1,056,470 இலட்சத்திற்கு 10.9 சதவீதத்தினால் உயர்வடைந்தன. பன்னாட்டு ஒதுக்கு மிகப்பெரும் சொத்துவகையாக அமைந்து மொத்தச் சொத்துக்களில் 1994 இறுதியின் 61.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 60.9 சதவீதத்திற்கு வகைகூறியது. உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ. 317,550 இலட்சத்திலிருந்து ரூ. 399,500 இலட்சத்திற்கு 25.8 சதவீதத்தினால் அதிகரித்தன.

உள்நாட்டுச் சொத்துக்களில், அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் அரச உத்தரவாதப் பிணைகளும் முறையே 5.9 சதவீதத்தினாலும் 145.6 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய கொடுகடன் நிறுவனங்களுக்குமான நடுத்தர, நீண்டகால கொடுகடன் வசதிகள் 16.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தேறிய மீள் கொடுப்பனவுகளும் செயற்படாத கடன்களின் பேரிலான ஒதுக்கீடுகளுமே காரணங்களாகும். 1995 இல் வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்களும் 15.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில் சுற்றோட்டத்தில் உள்ள நாணயம் ரூ. 430,810 இலட்சத்திலிருந்து ரூ. 466,850 இலட்சத்திற்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்தது. வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முக்கிய கூறுகளின் ஒப்பீடு அட்டவணை 11.2 இல் தரப்பட்டுள்ளது. மொத்த வைப்புக்கள் முக்கியமாக வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிரான நியதித் தேவைப்பாடுகளின் கீழ் மத்திய வங்கியுடன் பேணப்பட்ட வர்த்தக வங்கிகளின் வைப்புக்களையும், பன்னாட்டு அமைப்புக்கள் வெளிநாட்டு அரசுகள், மற்றும் வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் என்பனவற்றினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களையும் உள்ளடக்கி ரூ. 610,230 இலட்சத்திலிருந்து ரூ. 733,200 இலட்சத்திற்கு அதிகரித்து 20.2 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. பொறுப்புக்களில் வைப்புக்களே தனிப்பெரும் வகையாக விளங்கியதுடன் மொத்த வைப்புக்களில் 42.3 சதவீதத்திற்கும் வகை கூறின. இவ்வகையில், வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 28.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வர்த்தக வங்கிகளின் ரூபா வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள், மற்றும் வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் என்பனவற்றின் வைப்புக்கள் 13.3 சதவீதத்தினால் அதிகரித்தன.

1995 ஆண்டிற்கான வங்கியின் மொத்த வருவாய் 1994 இன் ரூ. 256,800 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 225,020 இலட்சமாக விளங்கிய வேளையில் 1995 இன் மொத்தச் செலவினம் முன்னைய ஆண்டின் ரூ. 242,800 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 208,020 இலட்சமாக விளங்கியது. வங்கியின் வருவாயில் ஏறத்தாழ 85.4 சதவீதம் வெளிநாட்டுச் சொத்துக்களின் முதலீட்டிலிருந்து உருவாக்கப்பட்ட வேளையில் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வட்டி வருவாய் ஏறத்தாழ 7.4 சதவீதத்திற்கு வகைகூறியது. செலவு மற்றும் ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கீடுகள், ஏனைய கட்டணங்கள் என்பனவற்றிற்கான ஏற்பாடுகள் என்பனவற்றின் பின்னர் வங்கியின் தேறிய இலாபமான ரூ. 17,000 இலட்சங்கொண்ட தொகை நாணய விதிச்சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசின் திரட்டிய நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டுமென குறித்தொதுக்கப்பட்டது.

## கணக்கிடல் கொள்கை

### பொது

இணைக்கப்பட்டுள்ள ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டடுள்ளதுடன் வழமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கிடல் தத்துவங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்திலும் அமைந்துள்ளன.

## அட்டவணை II - 2

### மத்திய வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் முக்கிய கூறுகளின் ஒப்பீடு
### 1994, 1995 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு

**பொறுப்புக்கள்**

| விடயம் | 1994 ரூ. ப. இ. | 1994 % | 1995 ரூ. ப. இ. | 1995 % |
|---|---|---|---|---|
| மூலதனமும் மிகையும் | 1,000.0 | 0.6 | 1,000 | 0.6 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 43,081 | 27.6 | 46,685 | 26.9 |
| வைப்புக்கள் | 61,023 | 39.1 | 73,320 | 42.3 |
| நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் | 4,925 | 3.2 | 4,925 | 2.8 |
| மூலதன உதவு தொகை க்/கு | 560 | 0.4 | 560 | 0.3 |
| மத்திய வங்கிப் பிணைகள் | 3,740 | 2.4 | – | – |
| ஏனைய பொறுப்புக்கள் | 41,629 | 26.7 | 47,016 | 27.1 |
| கூறுகளின் பேரில் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் | 17,307 | 11.1 | 16,255 | 9.4 |
| கட்டுப்பாட்டுக்கணக்குகள் ஒதுக்குகள் | 9,178 | 5.9 | 11,623 | 6.7 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின ஒதுக்கு | 4,939 | 3.2 | 5,547 | 3.2 |
| பன்னாட்டு ஒதுக்கு மீள் மதிப்பீட்டுக்கணக்கு | 1,940 | 1.2 | 2,583 | 1.5 |
| இலாப நட்டக்கணக்கு | 2,554 | 1.6 | 4,444 | 2.6 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியக் கணக்கு | 3,228 | 2.1 | 1,511 | 0.9 |
| ஏனையவை | 2,482 | 1.6 | 5,053 | 2.8 |
| மொத்தம் | 155,958 | 100.0 | 173,506 | 100.0 |

**சொத்துக்கள்**

| விடயம் | 1994 ரூ. ப. இ. | 1994 % | 1995 ரூ. ப. இ. | 1995 % |
|---|---|---|---|---|
| பன்னாட்டு ஒதுக்கு | 95,282 | 61.1 | 105,647 | 60.9 |
| உள்நாட்டுச் சொத்துக்கள் | 31,755 | 20.4 | 39,950 | 23.0 |
| ஏனைய சொத்துக்கள் | 28,921 | 18.5 | 27,909 | 16.1 |
| வழங்கப்பட்ட உத்தரவாதங் களுக்கான கூறுகளின் பொறுப்பு | 17,307 | 11.1 | 16,255 | 9.4 |
| வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்குகள் | 2,776 | 1.8 | 3,040 | 1.8 |
| சீராக்கற் கணக்குகள் பெறத்தக்க தொகை | 1,884 | 1.2 | 2,146 | 1.2 |
| சேகரிப்பிலுள்ள காசு விடயங்கள் | 1,517 | 1.0 | 646 | 0.4 |
| ஏனையவை | 5,438 | 3.4 | 5,823 | 3.3 |
| மொத்தம் | 155,958 | 100.0 | 173,506 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நாணய மாற்றல்

வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் நிலவிய செலாவணியின் நடுவீதத்தில் மாற்றப்பட்டுள்ளன.

## முதலீடுகள்

அனைத்து முதலீடுகளும் கொள்விலையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

## முற்பணங்கள்

ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள முற்பணங்கள் நிதிக்கூட்டு நிலையங்களிலிருந்து வரவேண்டிய செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்கீடுகளைக் கழித்துப் பெறப்பட்டவையாகும்.

## நிலையான சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் கொள்விலையில் பெறுமானத் தேய்வைக் கழித்துக் காட்டப்பட்டுள்ளன. பெறுமானத்தேய்வு குறைந்து செல்லும் நிலுவை முறையில் பின்வரும் வீதங்களில் அறிவிடப்படுகின்றது.

| விடயம் | சதவீதம் |
|---|---|
| கட்டடங்கள் | 2 |
| பொருத்துக்களும் இணைப்புக்களும் | 10 |
| அலுவலகத் தளபாடங்களும் கருவிகளும் | 10 |
| ஊந்து ஊர்திகள் | 10 |
| தனியாள் கணனிகள் | 25 |

நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு, அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டுக்குமானதாக இருந்ததுடன் நிலையான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்ட அல்லது அகற்றப்பட்ட ஆண்டிற்கு பெறுமானத்தேய்வு ஒதுக்கப்படமாட்டாது.

## கையிருப்புக்கள்

எழுதுகருவி வகைகள் மற்றும்பொறியியற் களஞ்சியங்கள் மீது ஆண்டில் ஏற்பட்ட மொத்தச் செலவு இலாப நட்டக்கணக்கில் கழிக்கப்பட்டதுடன் முடிவுக் கையிருப்புக்களைப் பொறுத்தவரையில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

## வருமானக்கணிப்பு

காசு அடிப்படையில் கணிக்கப்படும் செயற்படாக் கடன்கள் மீதான வட்டி தவிர, வட்டியும் ஏனைய வருமானங்களும் ஏடுகளில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.

## மத்திய வங்கிப் பிணைகள் மீதான கழிவுகளும் மிகை ஊதியங்களும்

இவ்வாண்டுக் காலத்தில் வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணைகள் மீது அனுமதிக்கப்பட்ட கழிவுகள் மற்றும் பெறப்பட்ட மிகை ஊதியங்கள் என்பன, இப்பிணைகள் முதிர்ச்சியடையும் நாளைக் கருத்திற் கொள்ளாது ஆண்டிற்கான இலாப நட்டக்கணக்கில் கணக்கிடப்படுகின்றன.

## தேறிய இலாபம்

அனைத்து செலவுகளுடன் பின்வரும் ஒதுக்கீடுகளையும் மேற்கொண்ட பின்னரே இலாப நட்டக் கணக்கில் தேறிய இலாபம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

(i) செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்கீடு.

(ii) நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கீடு

(iii) நாணய விதிச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒதுக்குகளுக்கான ஏனைய அவசிய ஏற்பாடுகளும் ஒதுக்கீடுகளும்.

## வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87 இன் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான முற்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் (வங்கிவீதம்) ஆண்டொன்றுக்கு 17 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது.

## குறுங்காலக் கொடுகடன்

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் மற்றும் ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் திட்டம் என்பனவற்றின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடல் வசதிகள் முறையே 1994 ஏப்பிறலிலும் மேயிலும் நிறுத்தப்பட்டன. எனினும் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் நிறுத்தப்படுவதற்கு முன்னர் வேளாண்மைக் கடன்பாட்டாளர்களுக்கு சுழலும் கடன்

### ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

1995 இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தினூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 371,950 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 390,300 இலட்சமாக விளங்கியது. 1995 இல் வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 1994 இன் ரூ. 138,340 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 180,280 இலட்சமாக விளங்கியது. ஆ. தீ. ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையானது சம்பந்தப்பட்ட உறுப்பு மேலாண்மையாளர்களின் இணக்கத்துடன் 1996 சனவரியிலிருந்து பிரதேசங்களுக்குள்ளே, உறுப்பினர் நாடுகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவினை ஐ. அ. டொலர்களில் மேற்கொள்வதனையும் உள்ளடக்கிய புதிய நடைமுறைகளுக்கு ஒப்புதலளித்துள்ளது.

### கட்டாயச் சேமிப்புக்கள் நிதியம்

இவ்வாண்டில் 4 உதவுநர்களினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மீது வங்கி ரூ. 0.6 இலட்சத்தினைச் (வட்டி உட்பட) செலுத்தியது.

### அரச கணக்குகள்

1995 இறுதியில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 1994 இறுதியின் 178 உடன் ஒப்பிடுகையில் 164 ஆக விளங்கியது.

### வெளிநாட்டு நிதி

ஆய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கி பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கடன்கள் கொடைகள் என்பனவற்றின் கீழ் கிடைக்கத்தக்கதாகவிருந்த பகிர்ந்தளிப்புக்களைத் தொடர்ந்தும் பெற்றுக்கொண்ட வேளையில் அரசின் சார்பில் வெளிநாட்டுக் கடன்களின் மீள் கொடுப்பனவுகளையும் மேற்கொண்டது.

### நாணய வெளியீடு

மத்திய வங்கி தனி நாணய வெளியீட்டு மேலாண்மையாளராக 1995 இல் இலங்கையில் சட்டரீதியான நாணய வழங்கல் பணியினை தொடர்ந்தும் மேற்கொண்டது. சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 1994 இறுதியின் ரூ. 430,810 இலட்சத்திலிருந்து 1995 இறுதியில் ரூ. 466,850 இலட்சத்திற்கு அதிகரித்தது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்கள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தின் 96 சதவீதத்திற்கு வகைகூறின.

சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தாள்களின் தரத்தினை முன்னேற்றுவதற்கான தூய நாணயத்தாள் நிகழ்ச்சித்திட்டம் 1995 இலும் தொடர்ந்து தொழிற்பட்டது. சுற்றோட்டத்திலுள்ள சுற்றோட்டத்திற்குப் பொருத்தமற்ற தாள்களைப் புறக்கீடு செய்யும் தொழிற்பாடும் அவற்றுக்குப் பதிலாக புதிய தாள்களை வழங்குதலும் ஆண்டு முழுவதும் தொழிற்பட்டது. 1992 இல் நிறுவப்பட்டதும் கணக்கிட்டு வகைப்படுத்தும் பொறித்தொகுதிகள் இரண்டினைக் கொண்டதுமான நாணய சரிபார்ப்பு, கணக்கிட்டு வகைப்படுத்தல் முறை 1995 ஆம் ஆண்டு முழுவதிலும் செயற்படுத்தப்பட்டதோடு இது தூய நாணயத்தாள் நிகழ்ச்சித் திட்டத்தினை விரைவுபடுத்துவதற்கானதாகவும் இருந்தது. 1995 இல் இலங்கையின் பழைய புதிய வடிவ நாணயத்தாள்களின் செயல் முறைப்படுத்தலுக்காக நாணயத்திணைக்களம் இரண்டு பொறித் தொகுதிகளைப் பெற்றுக்கொண்டது.

உணவு வேளாண்மை அமைப்பின் 50 ஆவது ஆண்டு நிறைவினை நினைவுகூருமுகமாக சுற்றோட்டத்திலுள்ளதைப் போன்ற 2 ரூபா நாணயக்குத்தியொன்றினை 1995 யூலையில் மத்திய வங்கி வெளியிட்டது. மேலும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50 ஆவது ஆண்டு நினைவினைக் குறிக்கும் விதத்தில் இன்னுமொரு ரூ. 5 நினைவு நாணயக்குத்தியை 1996 இல் வெளியிடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

1992 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வங்கியின் இடம்பெயர் நாணயக் கண்காட்சி 1995 இலும் தொடர்ந்தது. இலங்கை நாணயக் குத்திகள், நாணயத்தாள்கள் வேறு பல நாடுகளின் நாணயத்தாள்களின் மாதிரிகள் என்பன இடம் பெயர் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

### வங்கித்தொழில் அபிவிருத்தி

வங்கித் தொழில் திணைக்களத்தின் முதன்மைத் தொழிற்பாடுகளாவன வங்கித் தொழில் தொடர்பான கொள்கை மற்றும் வர்த்தக வங்கிகள், வர்த்தக வங்கிகளின் கிளைகள் என்பனவற்றை நிறுவுவது தொடர்பான வங்கித்தொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்தல், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை நிறுவுதல், நிதிக்கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கான எடுத்துரைப்புக்களை மதிப்பீடு செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

மேலும் இத்திணைக்களம் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் செயலாற்றத்தினைக் கண்காணிப்பதுடன் பி. கி. அ. வங்கிகளுக்கான கொள்கை உருவாக்கத்திலும் ஈடுபடுகின்றது. அத்துடன் இத் திணைக்களம் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் வேலைகளை ஒருங்கிணைப் பதுடன் இவற்றின் செயலாற்றத்தினையும் கண்காணிக்கின்றது.

1995 இல் வர்த்தக வங்கிகளின் முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்க பண்பாக இருந்தது யாதெனில் இரண்டு புதிய உள்நாட்டு வர்த்தக வங்கிகளும் வெளிநாட்டு வங்கியின் கிளையொன்றும் திறக்கப்பட்டமையேயாகும். இரு உள்நாட்டு தனியார் வர்த்தக வங்கிகளான வரையறுக்கப்பட்ட கொழும்பு யூனியன் வங்கி மற்றும் பான் ஏசியன் வங்கி ஆகியன நிறுவப்பட்டமையானது 1988 இல் வரையறுக்கப்பட்ட செலான் வங்கி நிறுவப்பட்டு ஏழு ஆண்டுகளின் பின்னர் இடம் பெற்றுள்ளது. 1992 இல் கொழும்பில் பப்ளிக் வங்கிபெர்காட் எனப்பெயர் கொண்ட இறுதி வெளிநாட்டு வங்கி நிறுவப்பட்டு மூன்று ஆண்டுகள் கழிந்தநிலையில் கொறிய எக்சேன்ஜ் வங்கியின் கொழும்புக்கிளை நிறுவப்பட்டுள்ளது. புதிய வர்த்தக வங்கிகள் நிறுவப்பட்டுள்ளமையானது நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் எதிர்கால பொருளாதார வளர்ச்சியில் உள்ள அதன் நம்பிக்கையையும் மொ. உ. உற்பத்தியில் நிதித்துறையின் பங்கு அதிகரிப்பதனையும் அதேபோன்று வங்கித்தொழில்துறை மேலும் வளர்ச்சி அடைவதற்கான உள்ளார்ந்த வளத்தையும் பிரதிபலிப்பதாகவுள்ளது.

இவ் வர்த்தக வங்கிகள், நிறுவப்பட்டதுடன் அபிவிருத்தி வங்கிகள் மற்றும் சேமிப்பு வங்கிகளை உள்ளடக்கிய வங்கித் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 1994 இன் 44 இலிருந்து 1995 இல் 47 இற்கு அதிகரித்தது. இதனால் 1995 இறுதியில் வங்கித் தொழில்முறை 26 வர்த்தக வங்கிகளையும் (8 உள்நாட்டு வர்த்தக வங்கிகளும், 18 வெளிநாட்டு வர்த்தக வங்கிகளும்) 17 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளையும் மூன்று அபிவிருத்தி வங்கிகளையும், சேமிப்பு வங்கி ஒன்றினையும் உள்ளடக்கியிருந்தது.

### வங்கிக்கிளை விரிவாக்கம்

நாணயச் சபையின் ஒப்புதலுடன் 1995 இல் வங்கிக்கிளை வலையமைப்பு 4 சதவீதத்தினால் 1199 இற்கு விரிவடைந்தது. விரிவாக்க விபரங்கள் பின்வருமாறு :

1995 இல் இலங்கை வங்கி இரு புதிய கிளைகளை அகுங்கல்ல என்ற இடத்திலும், அத்துருகிரிய என்ற இடத்திலும் திறந்தது. கஸன்பிந்துனவெவ, கொரவப்பொத்தனை, இபலோகம, மதவாச்சி, திறப்பன, யட்டவத்த, பதவியா-பராக்கிரமபுர, மெக்கொல்லேவா மற்றும் தொடன்கொட ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைப் பணிக்கிளைகள் ‘சி’ தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டன. புதிய விரிவாக்க அலுவலகங்கள் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்திலும் கொழும்பிலுள்ள முதலீட்டுச்சபை அலுவலகத்திலும் திறக்கப்பட்டன. ரான்ஸ்வேர்க்ஸ் இல்லத்திலுள்ள ஏற்றுமதி வர்த்தக நிலையத்திலுள்ள விரிவாக்க அலுவலகம் மூலடப்பட்டது. மேலும் இலங்கை வங்கி சென்னையிலும் கராச்சியிலும் இரு புதிய வெளிநாட்டுக்கிளைகளைத் திறந்துள்ளது.

மக்கள் வங்கி 1995 இல் தெகிவளையில் கிளையொன்றினைத் திறந்தது. மக்கள் வங்கி நான்கு புதிய பணிக் கரும பீடங்களை கொழும்பு பன்னாட்டு வானூர்தி நிலையம் (வருகைப்பகுதி) இராணுவத் தலைமை அலுவலகம் (காலிமுகத்திடல்) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (யாவத்தை) மற்றும் சட்ட சங்கக் கட்டடம் (கல்ஸ்டோப்) ஆகிய இடங்களில் திறந்தது. இவ்வாண்டில் பொகவந்தலாவ, எம்புல்தெனிய, கொட்டுவெகோட (மாத்தறை) ககத்துடுவ, கொதடுவ, தலவத்துக்கொட, பொல்பிட்டிகம, அநுராதபுரம் ஆகிய இடங்களில் 8 புதிய அடைவு நிலையங்களும் திறக்கப்பட்டன.

1995 இல் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி ஏழு புதிய கிளைகளை மட்டக்களப்பு, பஞ்சிகாவத்தை, அம்பாறை, கல்கிசை, மகரகம, பன்னவல, சூரியவெவ ஆகிய இடங்களில் திறந்தது. மேலும் இவ்வாண்டில் நவலோக வைத்தியசாலையில் கொடுப்பனவுக் கிளையொன்றினையும் திறந்தது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கி 7 புதிய கிளைகளை வத்தளை, வவுனியா, மட்டக்களப்பு, காத்தான்குடி, அவிசாவளை, நாவலப்பிட்டி, கெக்கிராவ ஆகிய இடங்களில் திறந்தது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும் இவ்வாண்டில் தொடர்ந்து விரிவடைந்து அளுத்கம, கடுவெல ஆகிய இடங்களில் இரு புதிய கிளைகளைத் திறந்தது. சம்பத் வங்கியின் கிளை நிலைமையும் அநுராதபுரத்திலும் குளியாப்பிட்டியிலும் அவிசாவளையிலும் புதிய கிளைகள் திறக்கப்பட்டதுடன் அதிகரித்தது.

1995 இல் பி. கி. அ. வங்கிகள் மீரிகமவிலும் (கம்பக பி. கி. அ. வங்கி) நாவலப்பிட்டியிலும் (கண்டி பி. கி. அ) வங்கி) இரு புதிய கிளைகளைத்

சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட மூலதனப் பேணல், தனிப்பட்ட கடன்பாட்டாளர் தொடர்பான மட்டுப்படுத்தலுக்கு இசைவாக நடத்தல், பணிப்பாளர்களுக்கும் அவர்களின் நலவுரித்துக்களுக்குமான கடன்களின் மீது கடப்பாடுகள், நியதிச்சட்ட காலப்பகுதிக்குள் குறித்துரைக்கப்பட்ட கணக்கியல் முறைகளில் ஆண்டு நிதியியல் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல், செயற்படா முற்பணங்களின் மீது தொங்கற் கணக்கில் வட்டியினை ஒதுக்கல், மற்றும் அறவிடமுடியா, ஐயக்கடன்களுக்குப் போதுமான ஏற்பாடுகளை வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. ஆய்விற்குரிய ஆண்டில் பெரும்பாலான வர்த்தக வங்கிகளினால் பேணப்பட்ட திரவச் சொத்துக்களின் மட்டம் குறித்துரைக்கப்பட்ட மொத்தப் பொறுப்புக்களில் 20 சதவீதத்திற்கும் (ஆகக்குறைந்தது) 30 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டன. அவர்கள் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலதனப் போதுமை நியமங்களைப் பேணினர். இது வங்கித்தொழில் ஒழுங்குகள் மற்றும் மேற்பார்வை நடைமுறைக் குழுவினால் குறித்துரைக்கப்பட்ட தரங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்நியமங்கள் இருவரிசை முறையினை உள்ளடக்கியுள்ளன. இந்நியதிகளின்படி வர்த்தக வங்கிகள் அவற்றின் மொத்த இடர் நிறையேற்றப்பட்ட சொத்தில் முறையே 4 சதவீதத்தினையும் 8 சதவீதத்தினையும் மைய மூலதனமாகவும் (செலுத்தப்பட்ட மூலதனத்தையும் கட்டுப்பாடற்ற ஒதுக்குகளையும் கொண்டது) பொதுவான மூலதனமாகவும் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

திணைக்களம் 1987 இலிருந்து தொழிற்பட்டுவரும் வைப்புக் காப்புறுதித் திட்டத்தினைத் தொடர்ந்தும் நிருவகித்தது. இத்திட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 8 ஆக இருந்த வேளையில் செலுத்தப்படவேண்டிய கட்டணம் தொடர்ந்தும் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒவ்வொரு ரூ. 100/- இற்கு 3.75 சதவீதமாக இருந்தது.

### வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள்

இலங்கையின் நிதியியல் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் மூலம் அவசியமாக்கப்பட்ட வங்கித்தொழில் சட்டத்திற்கான திருத்தங்கள் 1995 ஆம் ஆண்டின் 3 ஆம் இலங்கை வங்கித் தொழில் திருத்தச்சட்டமாக 1995 நவெம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. இத்திருத்தங்கள் அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் தொழிற்படுவதற்கு ஒரே மாதிரியான களத்தினை வழங்கல் மற்றும் மத்திய வங்கியின் மேற்பார்வைக்குப் பரந்தளவிலான வாய்ப்பினை வழங்கல் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது. இத்திருத்தங்களின் நியதிகளின் மூலம் ஏற்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பின்வருமாறு.

இலக்கமிடப்படட கணக்குகளைப் பேணுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை இயலச் செய்த ஏற்பாடுகள் நீக்கப்பட்டன. எனினும் ஏற்கனவே திறக்கப்பட்ட கணக்குகளை தொடங்கிய நாளிலிருந்து 2 ஆண்டுகளுக்கு தொழிற்படுத்தலாம். எனினும் வட்டி நோக்கம் தவிர்ந்த ஏனையவற்றிற்கு வரவுகள் அனுமதிக்கப்படமாட்டாது.

நாணயச் சபை தேவையெனக் கருதுமிடத்து, நாணய விதிச்சட்டத்தினதும், வங்கித் தொழில் சட்டத்தினதும் ஏற்பாடுகளை, வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளுக்கு நீடிப்பதன் மூலம் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின்மீது கடப்பாடுகளை விதிப்பதற்கு நாணயச்சபைக்கு இயலச் செய்தது.

மூலவங்கித் தொழில் சட்டத்தில் அத்தகைய ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்தப் படாத சிறப்பியல்பு வாய்ந்த வங்கித்தொழில் நிறுவனங்களான அபிவிருத்தி வங்கிகள், மற்றும் சேமிப்பு வங்கிகள் போன்றவற்றிற்கு உரிமம் வழங்கல் அவற்றின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆகியவற்றிற்கான செயல் முறையினை நிறுவியது. திருத்தப்பட்ட சட்டமானது இத்தகைய சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளின் வகைகளை விபரமாக குறிப்பிடுகின்றன.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அறவிடமுடியாக் கடன்களுக்கும் போதுமானளவு ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவேண்டும் எனத் தேவைப்படுத்துவதற்கு மத்திய வங்கிக்கு இயலச் செய்தது.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது முதன்மை வங்கித்தொழில் வாணிபத்திலிருந்து விலகிச் சென்று தமது

நிதியங்களை வேறு விடயங்களுக்கு மாற்றாதிருப்பதை உறுதி செய்யும்பொருட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் பங்குகளிலும் அசையாச் சொத்துக்களிலும் முதலீடுகளை மேற்கொள்ளுவதை மட்டுப்படுத்தியது.

வங்கித்தொழில் வாணிபத்திற்கு முரண்படாத வகையில் எத்தகைய வாணிபத்தையும் நடாத்திச் செல்வதற்கான துணைக்கம்பனிகளை வைத்திருப்பதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை அனுமதிப்பதற்கு நாணயச்சபைக்கு இயலச் செய்தது.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் விஞ்ஞாபனம் மற்றும் உறுப்புரைகளுக்கான திருத்தங்கள் நாணயச் சபையின் முன் ஒப்புதல்களைப் பெற்றிருக்கவேண்டும் என்ற தேவைப்பாடு விதிக்கப்பட்டது. மேலும் வர்த்தக வங்கிகளுக்கான மூலதனத் தேவைகளின் ஆகக்குறைந்த மட்டம் ரூ. 1,000 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

இத்திருத்தங்கள் வங்கித் தொழில் சட்டத்திற்கு புதிய பகுதியொன்றினை அதாவது பகுதி IX (அ) இனையும் அறிமுகப் படுத்தியுள்ளன. இது அபிவிருத்தி வங்கிகள் மற்றும் சேமிப்பு வங்கிகளை உள்ளடக்கிய சிறப்பு வங்கிகளின் உரிமங்கள் மற்றும் மேற்பார்வைகளுக்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. தேசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கி என்பன சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளாக குறிக்கப்பட்டுள்ளன. பகுதி IX (அ) இன் ஏற்பாடுகள் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட உரிம அதிகாரத்தை கொண்டிருக்கும். ரூ. 500 இலட்சத்திற்கு குறையாத பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ள கம்பனிகள் மட்டுமே நியமிக்கப்பட்ட நாளொன்றிலிருந்து பண வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல், முதலீடு செய்தல், அத்தகைய பணத்தைக் கடனாக வழங்குதல் போன்ற வாணிபங்களை மேற்கொள்ளலாம் எனக்குறிப்பிடுகின்றன. அவ்வாறு உரிமம் வழங்கப்பட்ட நிறுவனங்கள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக்கூட்டு நிலையங்கள், கூட்டுறவு சங்கங்கள், போன்ற சில நிறுவனங்கள் வங்கித் தொழில் சட்டத்தின் பகுதி IX (அ) இன் நியதிகளுக்கிணங்க உரிமம் பெறும் தேவைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. இச்சட்டமானது உரிமம் பெறுவதற்கான நடைமுறைகளை குறித்துரைப்பதுடன் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் வாணிபத்தை நடத்த வேண்டிய அமைப்பு, முறை என்பன தொடர்பாக பணிப்புரைகளை வழங்குவதற்கும் நாணயச் சபையை இயலச் செய்கிறது.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் நியதிச்சட்டக் கணக்காய்வினை மேற்கொள்ளும் வெளிக்கள கணக்காய்வாளர்களின் பங்கு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாகவும் திணைக்களம் கவனம் செலுத்தியது. தனது வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக குறித்துரைக்கப்பட்ட பணிகள் சிலவற்றை மேற்கொள்ளுமாறு வெளிக்கள கணக்காய்வாளர்களைத் தேவைப்படுத்தும் வழிகாட்டல்கள் தயாரிக்கப்படடுள்ளதோடு காலக்கிரமத்தில் அவை வழங்கப்படும்.

## வங்கியல்லா நிதி நிறுவனங்கள்

இலங்கை மத்திய வங்கி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினூடாக நிதிக் கூட்டு நிலையங்களின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் கண்காணித்து மேற்பார்வை செய்தது. 1995 இல் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களம் நிதிக் கூட்டு நிலையங்களின் தலப் பரீட்சிப்புக்களுக்கு பெருமளவு முக்கியத்துவம் வழங்கிய வேளையில் நேரகால முன்னெச்சரிக்கை முறையின் மூலமாகத் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினையும் தொடர்ந்து மேற்கொண்டது.

பதிவு செய்யப்பட்ட 24 நிதிக்கூட்டு நிலையங்களின் திரட்டிய ஐந்தொகையானது 1995 மாச்சு 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் அவற்றின் வைப்புப் பொறுப்புக்கள் 1993/94 நிதியாண்டில் ஏற்பட்ட 18.5 சதவீத அதிகரிப்பினைத் தொடர்ந்து 21.6 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. இக்கூட்டு நிலையங்களின் மூலதன நிதியம் முன்னைய ஆண்டின் 47.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 21.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அறவிடமுடியாக் கடன்களுக்கும் ஐயக்கடன்களுக்குமான ஒதுக்குகள் முன்னைய நிதி ஆண்டின் அதிகரிப்பான 171.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994/95 நிதியாண்டில் 21.7 சதவீதத்தினால் அதிகரித்தன. 1993/94 நிதியாண்டில் அறிவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒதுக்குகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு 1991 இல் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட நிதிக்கூட்டு நிலையங்கள் பணிப்புரை எண் 2 (அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஒதுக்கு) இன் நடைமுறைப்படுத்தலே முக்கிய காரணமாகும்.

இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட கட்டுப் பணமும் உரிமக் கோரல்களுக்குப் பின்னர் மத்திய வங்கியின் மீட்புக்களும் முறையே ரூ. 122 இலட்சமாகவும் ரூ. 199 இலட்சமாகவும் விளங்கின. கட்டுப்பணக் கொடுப்பனவுகள் மற்றும் உரிமக் கோரல்களுக்குப் பின்னரான மீட்புக்கள் என்பனவற்றின் மூலம் உருவாக்கப்பட்டு கிடைக்கத்தக்கதாகவிருந்த மூலவளங்கள் ரூ. 327 இலட்சமாக அமைந்து இத்திட்டத்தின் கீழான பொறுப்புக்களை ஈடுசெய்யப் போதுமானவையாக இருந்தன. இதற்கு திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட உரிமக்கோரல்களின் பின்னரான மீட்புக்கள் கூர்ந்து கவனிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் திட்டம் - II

சிநகை II திட்டம் 1982 இல் நடைமுறைக்கு வந்ததுடன் இத்திட்டத்தின் கீழான உத்தரவாதங்கள் 1989 வரை வழங்கப்பட்டன. இக்காலப்பகுதியில் ரூ. 7,140 இலட்சம்கொண்ட ஆகக்கூடிய உத்தரவாதப் பொறுப்பினையுடைய 2,531 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. 1995 இறுதியில் இவற்றில் ரூ. 7,020 இலட்சம் பெறுமதிகொண்ட 1,564 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தபட்டவேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக ரூ. 1,680 இலட்சம் பெறுமதி கொண்ட 353 உத்தரவாதங்கள் ஒன்றில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது இரத்துச் செய்யப்பட்டன. 1995 இறுதியில் ரூ. 590 இலட்சம் பொறுப்பினைக் கொண்ட 226 கோரல்கள் பெறப்பட்டதுடன் இதில் ரூ. 300 இலட்சம் பெறுமதி கொண்ட 125 உரிமைக் கோரல்கள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டன. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் 4 உரிமக் கோரல்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் நியதிகளின்படி ரூ. 7 இலட்சம் கொண்ட மத்திய வங்கியின் பொறுப்பில் 50 சதவீதத்தினை விஞ்சாத இடைக்காலக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கியொழுகாமையின் காரணமாக ரூ. 120 இலட்சம் பெறுமதி கொண்ட 45 கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. மத்திய வங்கிக்கு உரிமைக் கோரல்களைச் சமர்ப்பித்தபின்னர் கடன்பெறுநர்களினால் உரிமைக் கோரல்களுடன் தொடர்பான கடன்கள் மீளச் செலுத்தப்பட்ட வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ரூ. 36 இலட்சம் தொகைகொண்ட 7 கோரல்களைப் புறக்கீடு செய்தன. 1995 இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்து அல்லது கடன்களின் மீளச் செலுத்தல் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரூபா 82 இலட்சம் கொண்ட 26 உரிமைக்கோரல்களின் கருத்திற்கொள்ளல் பின்போடப்பட்டது.

1995 இறுதியில் ரூ. 660 இலட்சம் உத்தரவாதப் பொறுப்பினைக் கொண்ட ரூ. 1,110 இலட்சம் தொகை கொண்ட 440 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன. இவற்றில் ரூ. 867 இலட்சம் பொறுப்பினைக் கொண்ட 326 கடன்கள் நிலுவையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1995 இறுதியில் இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 294 இலட்சமாகஇருந்த வேளையில், மத்திய வங்கியினால் உரிமைக்கோரல்களுக்குப் பின்னர் மீட்கப்பட்டதொகை ரூ. 297 இலட்சமாக விளங்கி மூலவளங்களின் மொத்த உட்பாய்ச்சலை ரூ. 591 இலட்சமாக்கியது.

## சிறிய நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் திட்டம் III

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் III திட்டம் 1988 இலிருந்து 1991 வரை தொழிற்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 19,560 இலட்சங்கொண்ட 3,130 கடன்கள் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தன. 1,995 இறுதியில் ரூ. 6,078 இலட்சம் கொண்ட 1,339 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டிருந்த வேளையில் ரூ. 2,126 இலட்சம் பெறுமதியான 280 கடன்கள் தொடர்பான உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டிருந்தன அல்லது காலாவதியாகியிருந்தன. ரூ. 355 இலட்சம் மத்தியவங்கி உத்தரவாதப் பொறுப்புக்களைக் கொண்ட 146 கோரல்கள் 1995 இறுதியில் பெறப்பட்டன. இவற்றில் மொத்தம் ரூ. 229 இலட்சம் கொண்ட 83 உரிமைக் கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த வேளையில் மொத்தம் ரூ. 121 இலட்சம் கொண்ட 41 உரிமைக்கோரல்கள் நிராகரிக்கப்பட்டன. 4 கோரல்களைக் கவனத்துக்கெடுத்தல் பின்போடப்பட்டமைக்கு கடன்பாட்டாளர்கள் அத்தகைய கோரல்களைச் சமர்ப்பித்தபின் சம்பந்தப்பட்ட கடன் கணக்குகள் ஒழுங்குபடுத்தப்பட்டமையே காரணமாகும். 1995 திசெம்பர் இறுதியில் ரூ. 2,807 இலட்சங்கொண்ட ஆகக்கூடிய உத்தரவாதப்பொறுப்புடனான ரூ. 4,347 இலட்சம் கொண்ட 1,387 கடன்கள்

## அட்டவணை II - 6
## மத்திய வங்கிக் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் தொகுப்பு
## 1995 திசெம்பா 31 இல் உள்ளவாறு

(பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்)

| திட்டங்களும் ஆண்டுகளும் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் (சிஅகை) | | சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை) | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிறிய நடுத்தர அளவுக்கைத் தொழில்கள் I | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - II | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - III | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் - IV | | | |
| | 1995 | | 1995 | | 1994 | | 1995 | | 1994 | | 1995 | | 1994 | | 1995 | |
| விடயம் | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் | 767 | 31.2 | 1,670 | 286.1 | 2,531 | 1,392.5 | 2,531 | 1,392.5 | 3,130 | 1,955.5 (அ) | 3,130 | 1,955.6 (அ) | 6,270 | 4,735.9 | 7,382 | 6,056.8 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் | 767 | 23.4 (ஆ) | 1,670 | 157.5 (இ) | 2,531 | 713.6 (ஈ) | 2,531 | 713.6 (ஈ) | 3,130 | 1,312..6 (உ) | 3,130 | 1,312.6 (உ) | 6,270 | 2,855.8 (ஊ) | 7,382 | 4,176.7 (ஊ) |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் | 598 | 23.1 | 1,230 | 183.9 | 1,497 | 677.8 | 1,564 | 702.2 | 1,000 | 439.9 | 1,339 | 607.8 | 253 | 125.5 | 542 | 264.3 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் | 90 | 4.9 | 113 | 31.4 | 341 | 167.9 | 353 | 168.0 | 267 | 202.1 | 280 | 212.6 | 169 | 103.7 | 238 | 145.0 |
| **கோரல்கள்** | | | | | | | | | | | | | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் | 88 | 4.3 (எ) | 338 | 75.9 | 225 | 115.5 (எ) | 226 | 70.0 | 124 | 61.6 (எ) | 146 | 50.7 | 40 | 25.5 (எ) | 87 | 53.0 |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்புக்கள் | | 2.4 | | 33.9 | | 58.6 | | 58.6 | | 42.0 | | 35.5 | | 20.4 | | 42.4 |
| 3.3 தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | | | | | | | | | | | | | |
| 3.3.1 முழுமையாகத் தீர்க்கப்பட்டவை | 63 | 1.7 | 230 | 19.1 | 124 | 30.3 | 125 | 30.6 | 69 | 19.9 | 83 | 22.9 | 16 | 3.6 | 26 | 7.0 |
| 3.3.2 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை | 1 | 0.0 (ஏ) | 27 | 2.1 | 4 | 0.7 | 4 | 0.7 | | | | | | | | |
| 3.3.3 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | 7 | 0.2 | 30 | 5.5 | 44 | 11.7 | 45 | 11.7 | 24 | 7.4 | 41 | 12.1 | 3 | 0.4 | 23 | 10.6 |
| 3.3.4 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் (ஐ) | 16 | 0.2 | 37 | 2.0 | 5 | 1.1 | 5 | 1.1 | | | 1 | 1.6 | | | 1 | 0.5 |
| 3.3.5 பிற்போடப்பட்ட கோரல்கள் (ஒ) | 1 | 0.3 | 11 | 2.6 | 26 | 8.1 | 26 | 8.2 | 4 | 4.6 | 4 | 4.6 | 2 | 1.6 | 2 | 1.6 |
| 3.3.6 முடிவுறாக் கோரல்கள் (ஓ) | | | 3 | 0.5 | 15 | 4.8 | 14 | 4.4 | 25 | 10.8 | 13 | 3.7 | 18 | 12.9 | 34 | 28.9 |
| 3.3.7 புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் (ஓ) | | | | | 7 | 3.6 | 7 | 3.6 | 2 | 1.7 | 4 | 2.5 | 1 | 1.6 | 1 | 1.6 |
| 4.1 வெளிநிற்கும் கடன்கள் (ஔ) | 8 | 0.4 | 40 | 4.6 | 520 | 146.3 | 440 | 110.7 | 1,770 | 585.9 | 1,387 | 433.7 | 5,829 | 2,999.5 | 6,553 | 3,747.7 |
| 4.2 (இதில் நிலுவையில் உள்ளவை) | 8 | 0.4 | 40 | 4.6 | 394 | 68.1 | 326 | 86.7 | 567 | 108.0 | 621 | 143.2 | 509 | 51.5 | 1,339 | 43.7 |
| 4.3 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு | 8 | 0.3 (ஆ) | 40 | 2.9 (இ) | 520 | 84.3 (ஈ) | 440 | 66.4 (ஈ) | 1,770 | 386.8 (உ) | 1,387 | 280.7 (உ) | 5,829 | 1,951.7 (ஊ) | 6,553 | 2,588.3 (ஊ) |
| 5. கட்டணச் சேகரிப்புக்கள் | | 1.0 | | 12.2 | | 29.2 | | 29.4 | | 39.6 | | 42.5 | | 61.8 | | 84.9 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீட்புக்கள் | | 0.6 | | 19.9 | | 13.9 | | 29.7 | | 5.6 | | 20.1 | | 0.3 | | 6.5 |

(அ) தேசிய அபிவிருத்தி வங்கியால் சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் IV ற்கு மாற்றப்பட்ட கடன்கள் நீங்கலாக.

(ஆ) வெளிநிற்கும் கடன்களில் 75 சதவீதம்.

(இ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 400,000/- வரையறைக்குட்பட்டு, வெளி நின்ற கடன்களில் 60 சதவீதம்.

(ஈ) ரூ. 2,000,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை ஆகக்கூடியது ரூ. 800,000 இற்கும், ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுக்கு ஆகக்கூடியது ரூ. 1,200,000 இற்கும் உட்பட்டு, வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(உ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 1,600,000 இற்கு உட்பட்டு ரூ. 2,000,000, வரை, ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 3,000,000, ரூ. 3,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுக்கு முறையே 80 சதவீதம், 60 சதவீதம், 40 சதவீதம்.

(ஊ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 16 இலட்சம் என்பதற்குட்பட்டு ரூ. 5 இலட்சம் வரை, ரூ. 5 இலட்சம் -ரூ. 10 இலட்சம், ரூ. 10 இலட்சம் - ரூ. 20 இலட்சம், ரூ. 20 இலட்சம் - ரூ. 80 இலட்சம் என்பனவற்றிற்கு முறையே 90%, 80%, 70%, 60%.

(எ) ஒன்றுசேர்ந்த வட்டியையும் உள்ளடக்கிய செலுத்தப்படாத தொகை.

(ஏ) ரூ. 4,504.75 தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ) மீட்கப்பட்ட தவணைப் பணம் நீங்கலாக.

(ஒ) 2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஓ) 4.1. இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஔ) மீளப்பெறப்பட்ட தவணைப்பணத்தை உள்ளடக்காது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

தொழிற்பாட்டிலிருந்தன. இவற்றில் ரூ. 1,432 இலட்சங்கொண்ட தொகையைப் பொறுப்பாகக் கொண்ட 621 கடன்கள் நிலுவையிலிருந்ததாக அறிவிக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 1995 திசெம்பர் 31 இல் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 425 இலட்சமாக விளங்கிய வேளையில் கோரலுக்குப் பின்னரான மீட்புக்களாக மத்திய வங்கிக்கு ரூ. 201 இலட்சம் செலுத்தப்பட்டது.

### சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் திட்டம் IV

சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில் IV திட்டம் 1992 மாச்சில் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது தொழிற்பாட்டிலுமுள்ளதாகும். 1995 இன் இறுதியில் ரூ. 60,570 இலட்சங்கொண்ட 7,382 கடன்கள் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தன. இக்கடன்களுக்கான மத்திய வங்கியின் பொறுப்பு ரூ. 41,760 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் ரூ. 2,643 இலட்சங்கொண்ட 542 கடன்கள் முற்றாகத் தீர்க்கப்பட்டவேளையில் 238 உத்தரவாதங்கள் மீளப்பெறப்பட்டு அல்லது பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இசைவாக நடவாமையின் காரணமாக காலாவதியாகின. 1995 இன் இறுதியில் ரூ. 37,470 இலட்சம் கொண்ட 6,553 கடன்கள் தொழிற்பாட்டிலிருந்தன. இக்கடன்கள் மீதான மொத்த உத்தரவாதப் பொறுப்பு ரூ. 25,880 இலட்சமாகக் காணப்பட்டது. 1995 திசெம்பர் இறுதியில் ரூ. 530 இலட்சங்கொண்ட 87 கோரல்கள் பெறப்பட்டதுடன் அவற்றில் ரூ. 70 இலட்சங்கொண்ட 26 கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. உத்தரவாதக் கட்டுப்பணமாக 1995 இன் இறுதியில் சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 849 இலட்சமாக விளங்கியது. ஆண்டின் இறுதியில் ரூ. 65 இலட்சங்கொண்ட தொகை கோரல்களுக்குப் பின்னர் மீட்கப்பட்டன.

### பேருந்து கொள்வனவுக் கடன் (பேகொக) திட்டம்

பொதுப் போக்குவரத்துக்கான பேருந்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் பேருந்துத் தொழிற்பாட்டாளர்களுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்குவதற்காக மத்திய வங்கியினால் 1990 நவெம்பரில் இத்திட்டம் தொடக்கிவைக்கப்பட்டது. தேசிய அபிவிருத்தி வங்கியினால் கடன்களுக்கு மீள் நிதியிடப்பட்ட வேளையில் மத்திய வங்கியினால் உத்தரவாதம் வழங்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் ரூ. 10,990 இலட்சங்கொண்ட 1,932 கடன்கள் உத்தரவாதமளிக்கப்பட்டன. இவ்வுத்தரவாதங்களின் கணக்கிலான மத்திய வங்கியின் பொறுப்பு ரூ. 8,710 இலட்சமாகக் காணப்பட்டது.

பேருந்து கொள்வனவுக் கடன் திட்டம் போக்குவரத்துத் தொகுதிக்கு 1,911 பேருந்துகளை அறிமுகப்படுத்த உதவியது. இத்திட்டத்தின் பண்பு யாதெனில் தனியொரு உடைமையாளரான பேருந்துத் தொழிற்பாட்டாளர்களை அதிகளவில் கொண்ட 1,816 கடனாளிகள் இருந்தமையேயாகும்.

1995 இன் இறுதியில் ரூ. 3,251 இலட்சங்கொண்ட 596 கடன்கள் முற்றாகச் மீளச் செலுத்தப்பட்ட வேளையில் ரூ. 692 இலட்சம் பெறுமதி கொண்ட 117 உத்தரவாதங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் இணங்கி ஒழுகாமையின் காரணமாக ஒன்றில் காலாவதியாகின அல்லது புறக்கீடு செய்யப்பட்டன.

1995 இறுதியில் ரூ. 69 இலட்சம் உத்தரவாதப் பொறுப்புக்களைக் கொண்ட ரூ. 98 இலட்சம் தொகை கொண்ட 18 உரிமக் கோரல்கள் பெறப்பட்டன. இவற்றில் 9 கோரல்கள் 50 சதவீத இடைக்காலத்தீர்ப்பனவிற்குத் தகுதிபெற்றிருந்த மையினால் அவற்றிற்கு மொத்தமாக ரூ. 21 இலட்சம் செலுத்தப்பட்டது. 1995 இறுதியில் ரூ. 28 இலட்சம் தொகை கொண்ட 5 உரிமைக் கோரல்கள் வெளிநின்ற வேளையில் ரூ. 10 இலட்சம் பெறுமதிகொண்ட 2 உரிமைக் கோரல்கள் நிராகரிக்கப்பட்டன.

1995 இறுதிவரை இத்திட்டத்தின்கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தத் கட்டுப்பணம் ரூ. 212 இலட்சமாக இருந்தவேளையில் ரூ. 17 இலட்சம் கொண்ட கோரல்களுக்குப் பின்னரான மீட்புக் காணப்பட்டது. அட்டவணை 11.7 இத்திட்டத்தின் செயலாற்றத்தினைத் தொகுத்துத் தருகின்றது.

### வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IV

1992 யூலையில் தொடங்கிய வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின் (வீஉகுவபு திட்டம்) IV இன் கீழான மீள் நிதியிடல் திட்டம் 1995 இலும் தொடர்ந்து தொழிற்பட்டது. மத்திய வங்கி இத்திட்டத்தின் கீழ் உச்சக் கடன் வழங்குனராகத் தொழிற்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் அரச வீடமைப்புக் கடன் உத்தரவாத நிகழ்ச்சித் திட்டம் கட்டம் IV இன்கீழ் இலங்கை அரசிற்குக் கடனாக வழங்கப்பட்ட நிதியங்களிலிருந்து மத்திய வங்கியினால் மீள் நிதியிடல்

## அட்டவணை II - 7

### சிநகை - II, சிநகை - III, சிநகை - IV இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு 1995 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

(பெறுமதி '000 ரூபாய்களில்)

| கைத்தொழில் | சிறிய நடுத்தரக் கைத்தொழில் II, III, IV (1982 - 1995) | | | | | | சிறிய நடுத்தரக் கைத்தொழில் IV (1995) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | % | கடன் தொகை ரூ.ப.இ. | % | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை ரூ.ப.இ. | % | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | % | கடன் தொகை ரூ.ப.இ. | % | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை ரூ.ப.இ. | % |
| உணவு பதனிடல் | 2,968 | 22.8 | 1,958.0 | 20.8 | 1,148.8 | 19.9 | 146 | 13.1 | 147.2 | 11.1 | 97.4 | 11.0 |
| ஏனைய வேளாண்மைக் கைத்தொழில் | 277 | 2.1 | 136.4 | 1.4 | 86.8 | 1.5 | 6 | 0.5 | 7.5 | 0.6 | 4.7 | 0.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 251 | 1.9 | 265.6 | 2.8 | 148.7 | 2.6 | 10 | 0.9 | 22.2 | 1.7 | 13.6 | 1.5 |
| உலோக உற்பத்திகள் | 1,136 | 8.7 | 613.8 | 6.5 | 380.9 | 6.6 | 108 | 9.7 | 82.2 | 6.2 | 56.0 | 6.3 |
| கட்டடவாக்கப் பொருட்கள் | 784 | 6.0 | 465.5 | 4.9 | 309.1 | 5.4 | 45 | 4.0 | 43.9 | 3.3 | 29.5 | 3.3 |
| கட்டடவாக்க ஒப்பந்தம் | 211 | 1.6 | 337.6 | 3.6 | 180.1 | 3.1 | 47 | 4.2 | 101.6 | 7.6 | 64.6 | 7.3 |
| மர உற்பத்திகள் | 766 | 5.9 | 375.2 | 4.0 | 255.5 | 4.4 | 44 | 4.0 | 45.8 | 3.4 | 30.0 | 3.4 |
| ஆடைகள் | 786 | 6.0 | 693.5 | 7.4 | 391.3 | 6.8 | 26 | 2.3 | 34.2 | 2.6 | 22.1 | 2.5 |
| புடவைகள் | 291 | 2.2 | 297.7 | 3.2 | 162.3 | 2.8 | 18 | 1.6 | 20.1 | 1.5 | 13.3 | 1.5 |
| தொழிற் கூடத்திருத்தல் | 467 | 3.6 | 244.1 | 2.6 | 162.5 | 2.8 | 26 | 2.3 | 14.6 | 1.1 | 11.0 | 1.2 |
| ஏனையவை | 5,106 | 39.1 | 4,027.9 | 42.8 | 2,538.5 | 44.0 | 636 | 57.2 | 811.3 | 61.0 | 540.2 | 61.2 |
| மொத்தம் | 13,043 | 100.0 | 9,415.1 | 100.0 | 5,764.3 | 100.0 | 1,112 | 100.0 | 1,331.0 | 100.0 | 882.4 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஏனைய விடயங்கள், பயணிகள் மற்றும் வர்த்தகப் போக்குவரத்து, தோல், விலங்கு வளர்ப்பு, இரசாயனம், மீன்பிடி, உணவகம், கண்ணாடி இழை, மின்னியக்கம், கண்ணாடி, மட்பாண்டம், பொலித்தீன் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

வசதிகள் வழங்கப்படுகின்றன. வீஉகுவபுநி திட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் உடன்படிக்கையொன்று செய்துகொண்ட துணை உச்சக்கடன் வழங்குனர்கள்/நேரடி முதன்மைக் கடன் வழங்குனர்கள் எனக் குறித்துரைக்கப்பட்ட பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களிற்கு இந்நிதியங்கள் கிடைக்கச் செய்யப்பட்டன. தற்பொழுது இத்திட்டத்தின்கீழ், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் குருநாகல், கண்டி, கேகாலை, புத்தளம், காலி, பதுளை, கம்பகா, மாத்தளை, மாத்தறை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஆகியன துணை உச்சக் கடன் வழங்குனர்களாகப் பங்கேற்றுள்ளன. 1995 ஒற்றோபரில் அம்பாந்தோட்டை, களுத்துறை, இரத்தினபுரி, நுவரெலியா ஆகிய நான்கு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில்

## அட்டவணை II - 8

### பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின் தொகுப்பு

(பெறுமதி ப. இ. ரூபாய்களில்)

| விடயம் | திசெம்பர் 31இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | 1994 | | 1995 | |
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் | 1,932 | 1,098.6 | 1,932 | 1,098.6 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் | 1,932 | 871.2(அ) | 1,932 | 871.2(அ) |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் | 251 | 140.8 | 596 | 325.1 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் | 116 | 68.5 | 117 | 69.2 |
| **கோரல்கள்** | | | | |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் | 13 | 7.6(ஆ) | 18 | 9.8(ஆ) |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்பு | – | 6.3 | – | 6.9 |
| 3.3 கோரல்களின் தீர்ப்பனவு | | | | |
| 3.3.1 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை | 6 | 1.4(இ) | 9 | 2.1 |
| 3.3.2 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | 2 | 1.0 | 2 | 1.0 |
| 3.3.3 பின்போடப்பட்ட கோரல்கள் (உ) | – | – | – | – |
| 3.3.4 முடிவுறாக் கோரல்கள் (உ) | 4 | 2.5 | 5 | 2.8 |
| 3.3.5 புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் | | | 1 | 0.2 |
| 3.3.6 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் (ஊ) | 1 | 0.4 | 1 | 0.4 |
| 4.1 வெளிநின்ற கடன்கள் | 1,557 | 420.5(ஈ) | 1,208 | 218.4(ஈ) |
| 4.2 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு | 1,557 | 333.2(அ) | 1,208 | 171.8(அ) |
| 5. சேகரிக்கப்பட்ட கட்டணம் | – | 19.2 | – | 21.2 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீளளிப்புகள் | – | 0.5 | – | 1.7 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 16 இலட்சத்திற்கு உட்பட்டு ரூ. 20 இலட்சம் வரை, ரூ. 20 இலட்சம்- ரூ. 30 இலட்சம், ரூ. 30 இலட்சம்- ரூ. 40 இலட்சம் என்பனவற்றுக்கு முறையே 80%, 60%, 40%.

(ஆ) ஒன்று சேர்ந்த வட்டி உட்பட செலுத்தத் தவறிய தொகை.

(இ) முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 3.9 இலட்சம் கொண்ட இரண்டு விடயங்கள் இப்பொழுது பகுதியளவு செலுத்தப்பட்டது எனவகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) மீட்கப்பட்ட தவணைப் பணங்கள் நீங்கலாக.

(உ) 4.1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) 2.1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பங்கேற்பதற்காக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இலங்கை வங்கியினூடாக இத்திட்டத்தில் பங்கேற்றது. வீடமைப்புக்காக காணியைக் கொள்வனவு செய்தல், ஏற்கனவேயுள்ள வீடுகளைப் பெருப்பித்தல், முன்னேற்றல், புதுப்புத்தல் என்பன உட்பட சொந்தமாக குடியிருப்பதற்காக வீடமைத்தல் தொடர்பான எந்த நோக்கத்திற்காகவும் இத்திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படுகின்றது. ரூ. 5,700 அல்லது அதற்குக் குறைவான மாதாந்த வருமானத்தினைப் பெறும் குடியிருப்பாளர் இத்திட்டத்தின்கீழ் கடன்பெற உரித்துடையவராவர்.

1994 வரை தொழிற்பட்ட வீஉகுவபுநி திட்டம் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூ. 1,500 இலட்சம் கொண்ட முற்பணங்களின் அடிப்படையில் நடைபெற்றது. 1994 ஒற்றோபரில் வீடமைப்பு உத்தரவாத உடன்படிக்கையின்கீழ் ஐ. அ. டொலர் 250 இலட்சம் கொண்ட கடன்பாடுகள் கிடைக்கச் செய்யப்பட்டன. இதன் முதல் தொகுதியாக ஐ. அ. டொலர் 100 இலட்சம் பெறப்பட்டது. இக்கடன் தொகை 1995 ஏப்பிறலில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்திட்டதினை தொடர்ந்தும் நடத்துவதற்காக 1995 யூனில் ரூ. 1,500 இலட்சம் கொண்ட மேலுமொரு முற்பணம் திறைசேரியினால் வழங்கப்பட்டது.

வீஉகுவபுநி திட்டம் IV இன் செயலாற்றம் பற்றிய புள்ளிவிபரத்தொகுப்பு அட்டவணைகள் 11.9, 11.10, 11.11, மற்றும் 11.12 இல் தரப்பட்டுள்ளன.

1995 இல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 3,050 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் ரூ. 2,770 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1992 முதல் 1995 வரை ஒன்றுசேர்ந்த எண்தொகைகள் ரூ. 8,890 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டு ரூ. 6,370 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டதைக் காட்டுகின்றது.

இத் திட்டத்தின்கீழ் மிக உயர்ந்த விகிதமான கடன்பெறுநர்கள் கிராமியத்துறையைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். எனவே 1993, 1994 இன் ஒப்புதல்களில் 80 சதவீதமும் 1995 இன் ஒப்புதல்களின் 89 சதவீதமும் கிராமியத்துறை வீடமைப்பிற்கானதாக இருந்தது. பால் அடிப்படையில் கடன்பெறுநர்களின் பகுப்பு கிராமிய, நகரத்துறைகள் இரண்டினதும் கடன் பெறுநர்களில் சமமான சதவீதத்தினர் பெண்களாக இருந்தமையைக் காட்டியது. 1995 இல் கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பின்படி, 1995 இன் கடன்களில் ஏறத்தாழ 35 சதவீதம் புதிய வீடுகளின் கட்டுமானத்திற்காகவும் 24 சதவீதமானவை

### அட்டவணை II - 9

**வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IV**
**மீள் நிதியிடல் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புகளும்**

(ரூபா '000)

| துணை உச்சக் கடன் வழங்குநர் | ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதியிடல் | | பகிர்ந்தளிக்கப்பட்ட மீள்நிதியிடல் | |
|---|---|---|---|---|
| | 1995 | 1992-95 | 1995 | 1992-95 |
| இலங்கை வங்கி | 40,488 | 350,050 | 123,917 | 312,481 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி | 395 | 1,752 | 180 | 1,083 |
| வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி | – | 5,284 | 918 | 4,724 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 92,328 | 165,305 | 60,691 | 85,340 |
| மக்கள் வங்கி | 100,346 | 235,223 | 68,601 | 179,263 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | 42,263 | 66,699 | 18,154 | 32,989 |
| வரையறுக்கப்பட்ட செலான் வங்கி | 170 | 4,505 | 75 | 2,430 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 28,904 | 60,510 | 4,365 | 18,995 |
| **மொத்தம்** | 304,894 | 889,328 | 276,901 | 637,305 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஏற்கெனவேயுள்ள வீடுகளை பெருப்பிப்பதற்காகவும் 40 சதவீதமான கடன்கள் காணிகளின் கொள்வனவிற்காகவும் பெறப்பட்டன. காணிகளின் கொள்வனவிற்காக பெறப்பட்ட கடன்களின் பங்கு 1994 இன் 24 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 40 சதவீதமாக அமைந்து பெரும் அதிகரிப்பினைக் காட்டியது.

1995 இல் இத்திட்டத்தின் கீழான கடன்களில் 11 சதவீதமானவை ரூ. 10,000 அல்லது அதற்குக் குறைவானவையாக விளங்கிய வேளையில் 25 சதவீதத்திற்கு மேற்பட்டவை ரூ. 10,000 இற்கும் ரூ. 25,000 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. மேலுமொரு 53 சதவீதமான கடன்கள் ரூ. 45,000 இலிருந்து ரூ. 100,000 வரை காணப்பட்டன. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி மற்று பிகிஅ வங்கிகள் என்பனவற்றினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் விகிதம் முன்னைய ஆண்டினைவிட கணிசமான அதிகரிப்பினைக் காட்டியவேளையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கடனினது பங்கு வீழ்ச்சியடைந்தது. அவ்வாறிருந்தும்கூட ரூ. 25,000 இதற்குக் குறைவான சிறிய கடன்களை வழங்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களில் 40 சதவீதத்திற்கு இன்னமும் வகைகூறி

மிகக் குறைவான வருமானம் பெறும் வகுப்பினருக்கு இத்திட்டம் மிகவும் பக்க சார்பாக அமைந்துள்ளமையை எடுத்துக் காட்டுகின்றது. 1995 இல் இந் நிகழ்ச்சித் திட்டத்தினது செயலாற்றத்தின் முக்கிய பண்பாக அமைந்தது யாதெனில் இத்திட்டத்தில் நிதியியல் நிறுவனங்கள் மிகவும் சமமான அளவில் பங்கேற்றுக் கொண்டமையேயாகும்.

இத் திட்டத்தின் கீழான கடன்களின் முதிர்ச்சித் தன்மை 46 சதவீதமான கடன்கள் 5 ஆண்டுகள் வரைக்குமான கடன்களாகவும் மேலும் 16 சதவீதமானவை 5 தொடக்கம் 10 ஆண்டு காலப்பகுதிக்கானவையாகவும் 38 சதவீதமானவை 10 தொடக்கம் 15 ஆண்டுகளுக்கானவையாகவும் அமைந்தமையை எடுத்துக்காட்டுகின்றன.

## அட்டவணை II - 10

### வீஉகுவபுநி திட்டம் கட்டம் - IV இன் செயலாற்றத்தினது தொகுப்பு நோக்கம், முதிர்ச்சி, அளவின்படி ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள்

(ரூ. '000)

| வகை | | | ஒப்புதல்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1995 | | | 1992 - 1995 | | |
| | | | நகரம் | கிராமம் | மொத்தம் | நகரம் | கிராமம் | மொத்தம் |
| 1. கட்டடவாக்கம் | | ... | 6,321 | 99,821 | 106,142 | 54,928 | 342,255 | 397,183 |
| 2. முன்னேற்றங்கள் | | ... | 7,117 | 65,527 | 72,644 | 47,767 | 210,810 | 258,577 |
| 3. நிலக் கொள்வனவு | | ... | 19,648 | 103,329 | 122,977 | 44,430 | 184,171 | 228,601 |
| 4. உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | ... | 237 | 2,894 | 3,131 | 547 | 4,420 | 4,967 |
| **மொத்தம்** | | ... | **33,323** | **271,571** | **304,894** | **147,672** | **741,656** | **889,328** |
| முதிர்ச்சியின்படி கடன்கள் | | | | | | | | |
| 5 ஆண்டுகளுக்குக் குறைவானவை | | ... | 9,428 | 135,335 | 144,763 | 46,118 | 316,322 | 362,440 |
| 6 - 10 ஆண்டுகள் | | ... | 7,580 | 37,430 | 45,010 | 43,433 | 213,542 | 256,975 |
| 11- 15 ஆண்டுகள் | | ... | 16,315 | 98,706 | 115,021 | 57,822 | 210,633 | 268,455 |
| 16 - 20ஆண்டுகள் | | | – | 100 | 100 | 299 | 1,159 | 1,458 |
| **மொத்தம்** | | | **33,323** | **271,571** | **304,894** | **147,672** | **741,656** | **889,328** |
| கடன்களின் அளவு | ரூபா | | | | | | | |
| 0 | 2,500 | ... | 2 | 308 | 310 | 122 | 9,496 | 9,618 |
| 2,501 | 5,000 | ... | 359 | 3,062 | 3,421 | 3,231 | 32,848 | 36,079 |
| 5,001 | 7,500 | ... | 498 | 7,471 | 7,969 | 5,158 | 60,661 | 65,819 |
| 7,501 | 10,000 | ... | 2,118 | 20,503 | 22,621 | 13,659 | 156,083 | 169,742 |
| 10,001 | 15,000 | ... | 4,917 | 17,504 | 22,421 | 46,156 | 58,771 | 104,927 |
| 15,001 | 20,000 | ... | 2,199 | 15,250 | 17,449 | 10,544 | 40,681 | 51,225 |
| 20,001 | 25,000 | ... | 2,165 | 32,968 | 35,133 | 13,889 | 63,011 | 76,900 |
| 25,001 | 30,000 | ... | 565 | 11,048 | 11,613 | 2,804 | 23,085 | 25,889 |
| 30,001 | 35,000 | ... | 648 | 7,414 | 8,062 | 2,599 | 16,444 | 19,043 |
| 35,001 | 40,000 | ... | 769 | 9,379 | 10,148 | 3,695 | 21,869 | 25,564 |
| 40,001 | 45,000 | ... | 744 | 3,950 | 4,694 | 3,135 | 11,211 | 14,346 |
| 45,001 | 50,000 | ... | 3,131 | 48,022 | 51,153 | 10,180 | 92,602 | 102,782 |
| 50,001 | 100,000 | ... | 12,233 | 65,670 | 77,903 | 29,525 | 125,747 | 155,272 |
| 100,000> | | ... | 2,975 | 29,022 | 31,997 | 2,975 | 29,147 | 32,122 |
| **மொத்தம்** | | ... | **33,323** | **271,571** | **304,894** | **147,672** | **741,656** | **889,328** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை II - 11

**வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IV மாகாணங்களின்படி கடன் ஒப்புதல்கள்**

(ரூ. '000)

| மாகாணம் | 1995 | | 1992 - 95 | |
|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % |
| மத்திய | 53,794 | 17.6 | 134,268 | 15.1 |
| கிழக்கு | 4,497 | 1.5 | 20,602 | 2.3 |
| வடமத்திய | 13,865 | 4.5 | 157,208 | 17.7 |
| வடமேற்கு | 41,547 | 13.6 | 89,704 | 10.0 |
| வடக்கு | 537 | 0.2 | 4,368 | 0.5 |
| சப்பிரகமுவா | 32,913 | 10.8 | 78,295 | 8.8 |
| தெற்கு | 49,128 | 16.1 | 115,332 | 13.0 |
| ஊவா | 4,737 | 1.5 | 21,360 | 2.4 |
| மேல் | 103,876 | 34.1 | 268,191 | 30.2 |
| **மொத்தம்** | **304,894** | **100.0** | **889,328** | **100.0** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## சிறிய நடுத்தர கைத்தொழில் மற்றும் பேருந்து கொள்வனவு கடன் உத்தரவாத நிதிய மூலவளங்களின் முதலீடு

1988 யூலையில் தொடங்கிய முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் சிறிய நடுத்தர கைத்தொழில் மற்றும் பேருந்துக் கொள்வனவுக்கடன் உத்தரவாத நிதிய மூலவளங்களின் முதலீடு 1995 இலும் தொடர்ந்தது. 1995 இறுதியில் நிதிய மூலவளங்களின் முதலீட்டு உடைமையும் கட்டுப்பண சேகரிப்புக்களும் ரூ. 8,990 இலட்சமாகவும் இதே காலப்பகுதியில் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் ரூ. 1,205 இலட்சமாகவும் விளங்கின.

## தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (தொ. மு. அ. நி. திட்டம்)

மாவட்ட மட்டத்தில் சிறப்பியல்பு ரீதியாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக தற்போதுள்ள சிறிய கைத்தொழிலாளர்கள் இத்திட்டத்தின் மூலம் தொடர்ந்தும் பயன் பெறுகின்றனர். கிராம மட்டத்தில் கைத்தொழிலாளர்களின் உற்பத்தியையும் பணிகளையும் அபிவிருத்தி செய்வதனையும், சந்தையில் அவர்களை மிகுந்த போட்டித்தன்மை உடையவர்களாக்குவதனையும் நோக்காகக் கொண்டு தொழிற்படுகின்ற இத்திட்டம் அவர்களின் தொழில்நுட்ப முகாமைத்துவ தேர்ச்சியை தரமுயர்த்துவதற்கான கேள்வியை ஈடுசெய்வதற்கான தாகக் காணப்படுகின்றது. இந்நோக்கத்திற்குத் தேவையான நிதிகள் சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டத்தை உள்ளடக்கிய அதன் தொழில் நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1993 இன் பிற்பகுதியில் உலக வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டது. 1995 இல் பாடசாலைகளைவிட்டு விலகியோருக்கும், தொழிலற்ற கிராமிய இளைஞர்களுக்குமாக திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாயில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இதன் குறிக்கோள்யாதெனில் தொழில் முயற்சிகளின் உள்ளார்ந்த ஆற்றலை அவர்களுக்குப்

அட்டவணை II - 12

**வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் துறைவகைப்படி/பால்வகைப்படி கடன் ஒப்புதல்கள்**

(பெறுமதி ரூபாய்களில்)

| ஆண்டு | மொத்தம் | | கிராமியத்துறை | | | | நகரத்துறை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்கள் | | பெண்கள் | | ஆண்கள் | | பெண்கள் | |
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1992 | 4,273 | 27,381 | 2,977 | 19,205 | 1,244 | 7,445 | 39 | 523 | 13 | 208 |
| 1993 | 23,718 | 218,762 | 13,865 | 123,027 | 6,193 | 51,397 | 2,321 | 28,841 | 1,339 | 15,497 |
| 1994 | 22,733 | 338,291 | 13,317 | 195,544 | 5,669 | 73,466 | 2,600 | 50,223 | 1,147 | 19,057 |
| 1995 | 11,960 | 304,894 | 7,511 | 201,022 | 3,154 | 70,548 | 906 | 24,665 | 389 | 8,659 |
| **மொத்தம்** | **62,684** | **889,328** | **37,670** | **538,798** | **16,260** | **202,857** | **5,866** | **104,252** | **2,888** | **43,421** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

புரிந்துணரவைத்து வங்கிகள் மற்றும் ஏனைய பணித்துறை நிறுவனங்களுடன் தொடர்புகொள்வது, தொடர்பான விடயங்களின் மீது அவர்களுக்கு மதியுரை வழங்கவதுமேயாகும். இரண்டு நாட்களாக இடம்பெற்ற இந்நிகழ்ச்சித்திட்டத்தில் 90 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். அம்பாந்தோட்டை, தம்புள்ள, களுத்துறை, கண்டி, கபறனை ஆகிய இடங்களில் ஒழுங்குசெய்யப்பட்ட ஆய்வரங்குகளில் சிறிய நடுத்தரக் கைத்தொழிலுடன் தொடர்பான வாய்புக்கள் மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் என்ற பொருள்பற்றி திணைக்கள அலுவலர்களும் மக்கள் வங்கிக் கிளைகளின் மூத்த அலுவலர்களும் பேசினர்.

## பெருந்தோட்டத்துறை சீர்திருத்த செயற்றிட்டங்கள்

அரசாங்கம் சிஎஉ 408,550 இலட்சம் கொண்ட கடனுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளது. இத்தொகை பெருந்தோட்டத்துறையின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படும். உத்தேச இக் கடனின் கீழ் மத்திய வங்கி உச்சக் கடன் வழங்குநராக இருப்பதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடல் கடன்களை வழங்கும். இந் நிகழ்ச்சித் திட்டம் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும்.

## செயற்றிட்டங்களைப் பின்தொடர்தலும் பரிசோதித்தலும்

சிறிய நடுத்தரக் கைத்தொழில் செயற்றிட்டங்களின் ஆற்றல் மற்றும் தொழிற்பாடுகளை உற்றுநோக்கிக் கவனிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பரிசீலனை நிகழ்ச்சித் திட்டம் 1995 இலும் தொடர்ந்தது. தேவையானவிடத்து சரியான நடவடிக்கைகளை விதந்துரைக்கும் பொருட்டும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்படைக்கப்பட்ட உரிமைக் கோரல்களை தீர்ப்பனவு செய்வதற்குமாக மொத்தம் 109 செயற்றிட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. பெரும்பாலான செயற்றிட்டங்கள் கொழும்பு, பதுளை, கண்டி, மாத்தறை, கம்பகா, காலி மாவட்டங்களில் அமைந்திருந்தன.

## கிராமியக் கொடுகடன்

ஆய்விற்குரிய ஆண்டில் கொடைமூலம் நிதியிடப்பட்ட பல செயற்றிட்டங்களுக்கான நிறைவேற்று முகவராக மத்திய வங்கி தொடர்ந்தும் தொழிற்பட்டது. நிறைவேற்று முகவரான வங்கியின் தொழிற்பாடுகள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களை அனுமதித்தல், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கல். செயற்றிட்டங்களின் கீழ் தகமைபெற்ற கடன்கள் தொடர்பாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள்நிதியினைப் பகிர்ந்தளித்தல், கடன்திட்டங்களைக் கண்காணித்தலும் ஒருங்கிணைத்தலும், கடன் பதிவுகளைப் பேணல், ஏனைய உள்நாட்டு முகவர்களின் ஒத்துழைப்புடன் கடன் திட்டங்களை மேம்படுத்தல் என்பனவற்றைக் கொண்டிருந்தன. 1995 இல் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் பின்வருமாறு :

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்

- (i) வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டம்
- (ii) தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி செயற்றிட்டம்
- (iii) மத்திய நில நிரந்தரப்பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டம்
- (iv) தென் மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்
- (v) வடமேல் மாகாண நீர்மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(ஆ) வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்.

- (vi) கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்

(இ) வே.அ.ப. நிதியம்/க.ப.அ. முகவர்/ ஜீஓஎஸ்எல் ஆகியவற்றினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்

- (vii) சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்.

இவ்வாண்டில் மேலே குறிப்பிடப்பட்ட செயற்றிட்டங்களின் விபரமான தொழிற்பாடுகள் பற்றி கீழே ஆராயப்பட்டுள்ளன.

## (i) வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்போது நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆட்களையும், உடைமைகளையும் புத்தாக்கம் செய்வதற்கான நிதியியல் வசதிகளை வழங்குவற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வேளாண்மை புத்தாக்க செயற்றிட்டம் வங்கியினால் வெற்றிகரமாக பூரணப்படுத்துப்பட்டதன் பின்னர் 1995 யூன் 30 ஆம் நாளன்றுமுடிவுற்றது.

இச் செயற்றிட்டம் வடக்கிலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிழக்கிலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய எட்டு மாவட்டங்களையும் எல்லை மாவட்டங்களான அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை, பொலநறுவை, புத்தளம் ஆகியவற்றையும் உள்ளடக்கியருந்தது. கொடுகடன் மூலகங்களை நடைமுறைப் படுத்துவதற்காக 1991 இல் கிராமிய கொடுகடன் திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்ட செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு, முடிவுறும்நாளன்று பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட 12,896 துணைக் கடன்கள் தொடர்பாக வங்கிகளுக்கு ரூ. 6,880 இலட்சம் கொண்ட மீள்நிதியிடலை வழங்கியுள்ளதன் மூலம் கொடுகடன் பகிர்ந்தளிப்பிற்கான மொத்த ஒதுக்கில் 99 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கு பயன்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட ஆட்களிடமிருந்து கொடுகடனுக்கெழுந்த பலத்த கேள்வியின் நோக்கில் மீட்கப்பட்ட கடன்களை மீண்டும் வழிப்படுத்துவதற்கு வங்கியினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. செயற்றிட்ட முகாமைப் பிரிவினூடாக மீட்புக்களையும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட மீள் கடன் வழங்கலையும் வங்கி தொடர்ச்சியாகக் கண்காணிக்கும்.

## (ii) தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் 1989 இல் தொழிற்படத் தொடங்கியது. 1995 இறுதியில் முடிவுறும் விதத்தில் இச் செயற்றிட்டம் அட்டவணையிடப்பட்டிருந்தபோதும் அரசு கேட்டுக்கொண்டதன்படி 1997 இறுதிவரை நீடிக்கப்பட்டது. தேயிலை சிறு உடமையாளர்களின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரிப்பதனை நோக்காகக் கொண்ட சிறுஉடமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் தேயிலையின் தரத்தையும், தனியாருக்குச் சொந்தமான தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தியாற்றலையும் முன்னேற்றியுள்ளது. கொடுகடன் திட்டத்தின்கீழ் நிதியிடப்பட்ட நடவடிக்கைகள் களஅபிவிருத்தி, நாற்றுமேடை அபிவிருத்தி, தேயிலைத் தொழிற்சாலைகளின் புத்தாக்கம் மற்றும் முன்னேற்றம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. கொடுகடன் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆரம்ப நிலைகளில் குறிப்பிடத்தக்க பின்னடைவுகளைக் கொண்டிருந்தமைக்கு கள மட்டத்தில் எதிர்நோக்கப்பட்ட பல்வேறுபட்ட தடைகளும், இத்துறையின் முதலீடுகளை ஊக்கம் குன்றச்செய்த உலக விலைகளின் தாழ்ந்த மட்டமுமே பெருமளவு காரணங்களாகும். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டிருந்த கொடுகடன் புரிந்துணர்வு பிரச்சார இயக்கம் ஆய்வுக்குரிய ஆண்டில் செயற்றிட்டப் பிரதேசங்களில் ஆய்வரங்குகளையும் ஏனைய பிரசார நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியதன்மூலம் மத்திய வங்கியினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. கள அபிவிருத்திக்கான கொடுகடன் எல்லையின் மேல்நோக்கிய திருத்தம், கள அபிவிருத்திக்கான வட்டிவீதம் 2 சதவீதப் புள்ளியினால் குறைக்கப்பட்டமையின் மூலம் கடன் வழங்கல் வீதம் ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டமை, பதிவுசெய்யப்பட்ட தேயிலைக் கொழுந்து சேகரிப்பாளர்கள் மற்றும் தனியார் தேயிலை தொழிற்சாலைச் சொந்தக்காரர் என்போருக்கான ஊர்திக் கடன்களைப் பொறுத்தவரையான தகைமைக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமைபோன்ற பல திருத்தங்களின் ஊடாக 1995 இல், கடன் திட்டத்தின் மூல வடிவமைப்பில் பல திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்தகைய வழிமுறைகள் 1994இன் பின்னரைப்பகுதியிலும், 1995 இலும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கடன்களின் பகிர்ந்தளிப்பு வீதத்தினை விரைவுபடுத்த இயலச் செய்வதன் மூலம் 1995 இற்காக ஆ. அ. வங்கியினால் குறிக்கப்பட்ட கொடுகடன் இலக்கும் எய்தப்பெற்றது. கள அபிவிருத்தி மற்றும் தொழிற்சாலைப் புத்தாக்கம் என்பனவற்றிற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் கடன் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. 1995 இறுதிவரை பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூ. 3,390 இலட்சமாகும். இதில் 1995 இன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 1,930 இலட்சமாகும். 1995 இல் கள அபிவிருத்திக்காக (புதிய பயிரிடல் மற்றும் மீள் பயிரிடல்) வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 870 இலட்சமாக விளங்கிய வேளையில் நாற்றுமேடை,

தொழிற்சாலை அபிவிருத்தி என்பனவற்றிற்கான கடன்கள் முறையே ரூ. 80 இலட்சமாகவும் ரூ. 980 இலட்சமாகவும் காணப்பட்டன. 1995 இல் அனைத்துவகைகளுக்காகவும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மீள்நிதியிடல் ரூ. 920 இலட்சமாகக் காணப்பட்டது.

## (iii) மத்திய நில நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட நீண்டகால பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம் 1995 இல் அதன் தொழிற்பாட்டில் ஏழாவது ஆண்டை நிறைவுசெய்துள்ளது. இக்கொடுகடன் திட்டம் நிரந்தரப் பயிர்களின் குறிப்பாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் பழவர்க்கப் பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தக மயமாக்கலையும் மேம்படுத்துவதற்காக சலுகை வீதங்களில் வேளாண்மையாளர்களுக்கு நடுத்தரகால கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட தொன்றாகும். நாட்டில் நிரந்தரப் பயிர்த் துறையில் பண்ணை மற்றும் அறுவடைக்குப் பின்னைய நடவடிக்கைகளின் கையாளல், பதனிடல் போன்ற விடயங்களில் நவீன தொழில் நுட்பங்களை ஊக்குவிப்பதனையும் செயற்றிட்டம் வலியுறுத்துகின்றது. 1995 திசெம்பரில் இச்செயற்றிட்டம் நிறுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும் 1995 இல் செயற்றிட்டத்தின் செயலாற்றம் முன்னேற்ற மடைந்தமையைக் கருத்திற்கொண்டு மேலும் இரு ஆண்டுகளுக்கு ஆ. அ. வங்கி இதனை நீடித்தது.

இவ்வாண்டில் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த நாட்டின் முழுப் பகுதியையும் உள்ளடக்கத்தக்கதாக செயற்றிட்டப் பரப்பை விரிவாக்குவதன் மூலம் செயற்றிட்ட நிதிகளின் பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைந்து செல்லும் வகையில் செயற்றிட்டத்தின் கீழ் புதிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டமையின் மூலம் கொடுகடன் திட்டம் மீளவடிவமைக்கப்பட்டது. 1995 நவெம்பர் இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினது கடன்களின் ஒப்புதல் மற்றும் பகிர்ந்தளிப்புக்கள் என்பனவற்றின் ஒன்றுசேர்ந்த மொத்தம் முறையே ரூ. 5,983 இலட்சமாகவும் ரூ. 3,940 இலட்சமாகவும் விளங்கின. 1995 இறுதியில், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு அவற்றினால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியங்களுக்கெதிராக மத்திய வங்கி வழங்கிய மீள் நிதியிடலின் ஒன்றுசேர்ந்த மொத்தம் ரூ. 1,830 இலட்சமாகக் காணப்பட்டது.

பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களிலிருந்து எழுந்த துணைக் கடன்களுக்கான பலத்த கேள்வி கடன் பெறுநர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கடன் விண்ணப்பங்களுக்கும் வழங்குவதற்கான கடன் பணத்தில் பற்றாக்குறையை விளைவித்தது. ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ. அ. டொலர் 10 இலட்சம் கொண்ட தொகையை செயற்றிட்டத்தின் இன்னுமொரு தலைப்பின் செலவினத்திலிருந்து கொடுகடன் மூலகத்துக்கு மீள ஒதுக்குவதற்கு உடன்பட்டது. மேலும் கடன் விண்ணப்பங்கள் தொடர்பாக 14 சதவீத வட்டியில் இரு அரச வங்கிகளுக்கும் அவற்றின் சொந்த நிதியிலிருந்து கடன்களை வழங்கச் செய்வதனை இயலச்செய்யும் பொருட்டு அவ்விரு வங்கிகளுக்கும் 5 சதவீதப் புள்ளிகளைக் கொண்ட வட்டி உதவுதொகையை வழங்குவதற்காக மத்திய வங்கி திறைசேரியிடமிருந்து ரூ. 1,000 இலட்சம் உச்ச எல்லைக்குட்பட்ட விதத்தில் ஒப்புதலையும் பெற்றுள்ளது.

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிரந்தரப் பயிர்களுக்கான கடன்களைக் கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், நடைமுறைப்படுத்தல் என்பனவற்றின்மீது பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களிலிருந்து 20 அலுவலர்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கியின் வேளாண்மை வங்கித் தொழில் கல்லூரியில் பயிற்சி வழங்குவதற்கான ஒழுங்குகளை 1995 ஒற்றோபரில் மத்திய வங்கி மேற்கொண்டது. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் செலவு செயற்றிட்ட நிதிகளிலிருந்து ஈடுசெய்யப்பட்டது.

## (iv) தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்

1992 இல் தொழிற்படத் தொடங்கிய ஆ. அ. வங்கியினால் நிதியிடப்பட்ட தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் குறிக்கோள் செயற்றிட்டப் பிரதேசத்தில் வருவாய் உருவாக்கம் மற்றும் தொழில்வாய்ப்பு உருவாக்க வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் தென்மாகாணத்திலுள்ள மக்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதேயாகும். வங்கி செயற்றிட்டத்தின் கொடுகடன் மூலகத்தின் நிறைவேற்று முகவராக தொழிற்படுகின்றது. இச்செயற்றிட்டம் மொத்தக் கொடுகடன் ஒதுக்காக சிஎஉ 64 இலட்சத்தினை (ஏறத்தாழ ரூ. 4,500 இலட்சம்) கொண்டிருந்தது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுள்ள மூன்று பி.கி.அ. வங்கிகளும்

பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் தென்மாகாண மாகாணசபையில் ஏற்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்ட அலுவலகத்தின் உதவியையும் பெற்றுக்கொண்டன. இச்செயற்றிட்டத்தின் கீழ் வெலிகமவில் உள்ள சாளி மவுண்ட் கைத்தொழில் பேட்டையிலுள்ள சிறு/நடுத்தர அளவுக் கைத்தொழில்களுக்கும், தென்மாகாணத்திலுள்ள ஏனைய சிறு/நடுத்தர அளவுக் கைத்தொழில் முயற்சிகளுக்கும் வங்கியினால் மீள் நிதியிடல் வழங்கப்படுகின்றது. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ஆண்டிற்கு 6 சதவீதத்தில் வங்கி கடன் வழங்கிய வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் துணைக் கடன்களை ஆண்டிற்கு 14 சதவீத வட்டியில் வழங்கின.

பி. கி. அ. வங்கிகளுக்கு மீள் நிதியினை வழங்கும் ஏற்பாடுகள் 1994 இல் தொடங்கியது. 1995 இல் 1,395 கடன்கள் தொடர்பாக ரூ. 381 இலட்சம் கொண்ட தொகையை மீள்நிதியிடலாக வங்கி வழங்கியது. 1995 இறுதியில் 3,512 கடன்கள் தொடர்பாக ஒன்றுசேர்ந்த மீள்நிதியிடல் ரூ. 696 இலட்சமாக விளங்கியது.

## (v) வடமேல் மாகாண நீர்மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கொடுகடன் திட்டம் 1995 இல் தொழிற்பாட்டின் இரண்டாவது ஆண்டினை நிறைவு செய்துள்ளது. இக்கொடுகடன் திட்டத்தின்கீழ் குருநாகல், புத்தளம் மாவட்டங்களின் வேளாண்மைக் கிணறுகள் சிறுஅளவு ஏற்றல் நீர்ப்பாசன செயற்றிட்டங்கள் வேளாண்மை நடவடிக்கைகள் மற்றும் சுயதொழில் வாய்ப்பு செயற்றிட்டங்கள் என்பனவற்றிற்கு கடன்களின் வடிவில் நிதி உதவிகள் வழங்கப்பட்டன. சுயெதொழில்வாய்ப்பு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் பெண் கடன்பாட்டாளர்களுக்கு கடன் வழங்குவதில் செயற்றிட்டம் பெரும் முக்கியத்துவத்தினை வழங்கியது. செயற்றிட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து புத்தளம், குருநாகல் பி.கிஅ.வங்கிகளும் அட்டன் நஷனல் வங்கியும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக தொழிற்பட்டன. கடன்வழங்கலை அதிகரிக்கும் பொருட்டு, 1995 நவெம்பரில் மக்கள் வங்கியும், இலங்கைவங்கியும் புதிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக அனுமதிக்கப்பட்டன. இச்செயற்றிட்டத்தின் கீழான கொடுகடன் பகிர்ந்தளிப்பிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி சிஎஉ 16 இலட்சம் (இலங்கை ரூபா 900 இலட்சம்) கொண்ட தொகையை வழங்கியது. இலங்கை அரசின் உதவுதொகை வேளாண்மைக் கிணறுகளைக் கட்டுவதற்காக வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவுதொகையின் வடிவில் அமைந்துள்ளது.

1995 இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் வடமேல் மாகாணத்தில் 200 வேளாண்மை கிணறுகளை அமைப்பதற்காக ரூ. 66 இலட்சத்தையும், பெண்களுக்கான 550 சுய வேலைவாய்புத் துணைச் செயற்றிட்டங்களுக்கு ரூ. 66 இலட்சத்தையும் பகிர்ந்தளித்தன. 1995 யூலையில் முதலாம் நாளன்று துணைக் கடன்களின் வட்டி வீதம் ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டவேளையில் மத்திய வங்கியின் கடன் வழங்கல் வீதம் ஆண்டுக்கு 8 சதவீதத்தில் இருந்து 6 சதவீதத்திற்கு கீழ்நோக்கி திருத்தப்பட்டது.

## (vi) கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்

வே.அ.ப. நிதியத்தினால் நிதியிடப்பட்ட கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் வேளாண்மை மற்றும் சுயெதாழில் வாய்ப்பு நடவடிக்கைகளுக்காக நன்மை பெறுநர்களுக்கு கொடுகடன்களை பகிர்ந்தளிப்பதற்காக சிஎஉ 15.5 இலட்சம் கொடுகடன் மூலகத்தினை கொண்டிருந்தது. 1987 இல் தொழிற்பாட்டை தொடங்கிய இச்செயற்றிட்டம் 1995 திசெம்பரில் முடிவடைந்தது. முடிவடையும் நாளுக்கு முன்னர் கடன்களை பகிர்ந்தளிப்பதற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் நிதியிடல் வசதிகளை வழங்குவதற்காக, இச்செயற்றிட்டத்தின் கணக்குகள் 1996 யூன் இறுதிவரை திறந்தே இருக்கும். 1995 இறுதியில் இச்செயற்றிட்டத்தின் அனைத்து வகைகளின்கீழும் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிகளின் தொகை ரூ. 1,470 இலட்சமாக விளங்கி மொத்த ஒதுக்கான ரூ. 900 இலட்சத்தினை (சிஎஉ 15.5 இலட்சம்) விஞ்சியது. குறுங்காலப் பயிர்ச்செய்கை, நடுத்தர கால வேளாண்மை, மற்றும் கைத்தொழில் நோக்கங்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டன. 1995 இல் வாழைப் பயிர்ச் செய்கை பண்ணை அபிவிருத்தி மற்றும் சுயதொழில் வாய்ப்பு செயற்றிட்டங்கள் ஆகிய செயற்றிட்டங்களில் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ. 193 இலட்சமாகும். செயற்றிட்டங்களின்கீழ் நன்மையடைந்தோரின் மொத்த எண்ணிக்கை முடிவு நாளன்று 8,471 ஆக விளங்கியது. இச்செயற்றிட்டத்தின் கீழான கடன்களின் மீட்பினை மத்திய வங்கி தொடர்ந்தும் கண்காணித்து மேற்பார்வை செய்யும்.

## (vii) சிறுவேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

*1995* இல் புத்தளம், கண்டி, காலி மற்றும் மாத்தறை ஆகிய நான்கு மாவட்டங்களில் சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் நிறைவேற்று முகவராக வங்கி தொடர்ந்தும் தொழிற்பட்டது. மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் வறுமையை ஒழிப்பதும், மிக வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இந் நோக்கத்திற்காக வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் சிஎஉ *48* இலட்சம் கொண்ட கடனையும் கனடிய பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மை சிஎஉ *47* இலட்சம் கொண்ட கொடையையும் வழங்கின. அரசின் சார்பில் இச் செயற்றிட்டங்களுக்கான மத்திய வங்கியின் பங்களிப்பு சிஎஉ *29* இலட்சமாக விளங்கும். *1990* இல் தொடங்கிய செயற்றிட்ட நடவடிக்கைகள் *1995* இல் அதன் ஆறாவது ஆண்டு தொழிற்பாட்டினை நிறைவு செய்துள்ளது.

*1995* இறுதியில் கண்டி, புத்தளம், மாவட்டங்களிலுள்ள (வே.அ.ப. நிதிய மாவட்டங்கள்) நன்மைபெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை *19,700* ஆக அமைந்து ரூ. *1,680* இலட்சம் பெறுமதியினைப் பதிவு செய்தது. காலி மாத்தறை மாவட்டங்களின் (க.ப.அ. முகவர் மாவட்டங்கள்) ஒப்பிடத்தக்க எண்தொகை முறையே *10,166* கடன்களாக அமைந்து ரூ. *795* இலட்சம் பெறுமதியினைக் கொண்டிருந்தது. இச்செயற்றிட்டத்தின் கீழான வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பாக, வேஅப நிதியம் மற்றும் க.ப.அ. முகவர் மாவட்டங்களில் முறையே *87* சதவீத, *86* சதவீத திருப்திகரமான மீட்பு வீதங்கள் அடையப்பட்டுள்ளன.

### அட்டவணை II - 13

### பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிளை வலையமைப்பு

| பெயர் | நிறுவப்பட்ட திகதி | தலைமை அலுவலகம் அமைவிடம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | 1995 இறுதியில் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | |
| களுத்துறை | 85.07.13 | புளத்சிங்கள | 4 | 3 | 4 | 1 | _ | _ | 1 | 2 | _ | – | – | 15 |
| மாத்தறை | 85.07.28 | மாத்தறை | 5 | 2 | _ | 1 | _ | _ | _ | 4 | _ | – | – | 12 |
| குருநாகல் | 85.08.10 | குளியாப்பிட்டி | 6 | 4 | 2 | 1 | 1 | 1 | _ | 2 | _ | – | – | 17 |
| அநுராதபுரம் | 85.08.12 | அநுராதபுரம் | 2 | 4 | 1 | _ | _ | _ | 3 | 1 | _ | – | – | 11 |
| அம்பாந்தோட்டை | 86.12.13 | அம்பாந்தோட்டை | | 2 | 2 | 2 | _ | 1 | _ | 1 | _ | – | – | 8 |
| கேகாலை | 87.02.08 | கேகாலை | | | 8 | 1 | 2 | 1 | (1) | 1 | 1 | 1 | – | 14 |
| புத்தளம் | 87.07.11 | சிலாபம் | | | 5 | 1 | _ | 2 | 1 | 1 | _ | – | – | 10 |
| காலி | 87.08.17 | எல்பிட்டிய | | | 1 | 7 | 1 | _ | _ | 3 | _ | – | – | 12 |
| கண்டி | 87.10.13 | கண்டி | | | 6 | 3 | _ | 2 | _ | 2 | _ | – | – | 13 |
| நுவரெலியா | 88.10.10 | நுவரெலியா | | | | 1 | 3 | 2 | _ | 2 | _ | – | 1 | 9 |
| மொனராகலை | 88.10.11 | புத்தளை | | | | 1 | 2 | 1 | 2 | _ | _ | – | – | 6 |
| பதுளை | 90.10.13 | பதுளை | | | | | | 4 | 2 | 3 | _ | 4 | – | 13 |
| பொலநறுவை | 91.05.17 | பொலநறுவை | | | | | | | 4 | 2 | 1 | – | – | 7 |
| மாத்தளை | 91.06.21 | மாத்தளை | | | | | | | 5 | 1 | _ | – | – | 6 |
| இரத்தினபுரி | 91.09.30 | இரத்தினபுரி | | | | | | | 4 | 2 | 1 | – | – | 7 |
| அம்பாறை | 92.02.24 | அம்பாறை | | | | | | | | 5 | 2 | – | – | 7 |
| கம்பகா | 93.06.07 | கம்பகா | | | | | | | | | 2 | 1 | 1 | 4 |
| மொத்தம் | | | 17 | 15 | 29 | 19 | 9 | 14 | 21 | 32 | 7 | 6 | 2 | 171 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1995 இன் நடுப்பகுதியில் சுதந்திரமான அமைப்பொன்றினால் இச்செயற்றிட்ட நன்மை பெறுநர்களின்மீது ஆய்வொன்று நடாத்தப்பட்டது. செயற்றிட்டத்தின் நன்மை பெறுநர்களில் ஏறத்தாழ 85 சதவீதத்தினர் இலக்கிடப்பட்ட தொகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டிருந்தமையையும் செயற்றிட்டத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியினைப் பெற்ற நன்மையடைந்தோரில் ஏறத்தாழ 66 சதவீதத்தினர் 1995 இன் நடுப்பகுதியில் வறுமைக் கோட்டைத் தாண்டிவிட்டதையும் மேற்குறிப்பிட்ட ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது. செயற்றிட்டத்தின் மொத்த நன்மை பெறுநர்களில் பெண்கள் 63 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தமையையும் இந்த ஆய்வு எடுத்துக்காட்டியது.

### பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

1995 இல் பிகிஅ வங்கிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் விரிவாக்கியதன் மூலம் கிராமியப் பொருளாதாரத்தின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கும் உதவியது.

### பி.கி.அ. வங்கிகளின் கிளை வலையமைப்பு

தொழிற்பாட்டிலிருந்து பிகிஅ வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 1995 இறுதியில் மாற்றமின்றி 17 ஆக விளங்கியது. இவ்வாண்டில் புதிய கிளைகள் இரண்டால் அதிகரிக்கப்பட்டதன் மூலம் பி.கி.அ. வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1995 இல் 171 இனை அடைந்தது.

### வைப்புக்களைத் திரட்டல்

கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், வங்கி வசதி இல்லாத மற்றும் வங்கி வசதிகள் குறைவாயுள்ள பகுதிகளில் இடம்பெயர் வங்கித் தொழில் பணிகளுக்கான ஏற்பாடுகள் ஆகியவற்றின் வாயிலாக கிராமிய சேமிப்புக்களைத் திரட்டுவதில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் குறிப்பிடத்தக்களவில் உதவின. 1995 செத்தெம்பர் இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் 902,996 கணக்குகளின் பேரில் திரட்டப்பட்ட மொத்த வைப்புக்கள் ரூ. 17,600 இலட்சமாக விளங்கி 1994 இன் இறுதியில் காணப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் வைப்புக்களின் பெறுமதியில் 17 சதவீத, அதிகரிப்பையும் கணக்குகளின் எண்ணிக்கையில் 8 சதவீதமுமான அதிகரிப்பையும் கொண்டிருந்தன. சேமிப்பு வைப்புக்கள் இவ்வைப்புக்களின் பெருமளவுக்கு வகைகூறின. 894,659 கணக்குகளின் பேரிலான சேமிப்பு வைப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூ. 14,390 இலட்சமாக விளங்கியது. சேமிப்புக் கணக்கொன்றிலுள்ள சராசரித் தொகை 1994 இன் ரூ. 1,534 இலிருந்து 1995 இல் ரூ. 1,608 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. நிலையான வைப்பு ஒன்றின் சராசரிப் பெறுமதி 1994 இன் ரூ. 30,370 இலிருந்து 1995 இல் ரூ. 39,541 இற்கு அதிகரித்தது.

### கொடுகடன் வழங்கல்

1995 சனவரியிலிருந்து செத்தெம்பர் வரையான காலப்பகுதியில் தங்கம் மற்றும் தங்கத்தினால் செய்யப்பட்ட பொருட்களினதும் அடைமானத்துக்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கி 258,547 கடன்களின்பேரில் ரூ. 14,810 இலட்சம் கொண்ட தொகையொன்று பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் வழங்கப்பட்டன. 1994 ஆம் ஆண்டில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் 327,187 கடன்களின் பேரில் ரூ. 18,080 இலட்சம் கொண்ட தொகை வழங்கப்பட்டது. கடனொன்றுக்கு வழங்கப்பட்ட சராசரி அளவு (தங்கம் மற்றும்) தங்கத்தினால் செய்யப்பட்ட பொருள்களின் அடைமானத்துக்கெதிராக வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கி) 1994 இன் ரூ. 5,526 இலிருந்து 1995 இல் ரூ. 5,728 இற்கு படிப்படியாக உயர்ந்தது.

1995 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டங்களும் வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்ற ஆட்களுக்குமான திட்டங்களும் ஆசிரியர்களுக்கான திட்டங்களும் உள்ளடங்கும். பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் இத்தகைய திட்டங்களுள் முதலாவது திட்டம், இலங்கையில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் தென்கொரியாவில் தொழில் வாய்ப்புப் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆட்களுக்கு அவர்கள் புறப்படுவதற்கு முன்பாகக் கடன்களை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் கடன்களை மீட்பதிலும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் கவனஞ் செலுத்தின.

### ஏனைய நடவடிக்கைகள்

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு பல்வகைத் துணைப் பணிகளை வழங்கியதன் மூலம் கிராமிய

பொருளாதாரத்தில் அபிவிருத்திப் பங்கொன்றை வகித்தன. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்குப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்ததன் மூலம் ஆலோசனைகளை வழங்கின. இவை, கிராமங்களில் ஜனசமுவ கூட்டங்களை தொடர்ந்தும் நடாத்தி கிராமத்திலுள்ள வறிய மக்கள் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளில் கிடைக்கக்கூடிய வங்கித் தொழில் வசதிகளை அறிந்து கொள்ளவும் அதனால் கொடுகடன் வசதிகளை விரிவாக்கவும் வழிசெய்தன. இவ்வங்கிகள் சந்தைப்படுத்தலையும், வேளாண்மை உற்பத்திகளைப் பதனிடலையும் தொடர்ந்து ஊக்குவித்தன.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், நிரந்தரப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம், வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம், ஐ. நா. உதவு வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட செயற்றிட்டம், தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம், வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில் கடன் செயற்றிட்டம், இசுறு செயற்றிட்டம் ஆகிய பல்வேறு சிறப்புக் கொடுகடன் திட்டங்களில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாகத் தொடர்ந்தும் இயங்கின.

### கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

1995 ஆம் ஆண்டில் இக்கல்லூரி மத்திய வங்கி வர்த்தக வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கியல்லா அமைப்புக்களின் பல்வேறு பயிற்சித் தேவைகளை நிறைவு செய்துள்ளன.

அண்மை ஆண்டுகளில் வெளிக்கள அலுவலர்களையும் நிறுவனக் கொடுகடன் பயன்பெறுநர்களையும் பயிற்றுவிப்பதில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்டது. இத்திட்டங்கள் அபிவிருத்திக்கு முதன்மையளித்ததுடன் தேசிய பொருளாதாரத் தேவைகளுக்கு குறிப்பாக வறுமை ஒழிப்பு மற்றும், புத்தாக்கம் போன்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்தின.

பெறப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு, வங்கித்தொழில் மற்றும் பொருளாதாரத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்களுக்கு இடமளித்து, வேறுபட்ட கற்கை நெறிகளை குறிப்பாக புதிய ஆராய்ச்சிகளையும் உள்ளடக்கி தொடரும் ஆண்டுக்கான பயிற்சி நெறிகள் வரையப்பட்டன. இவற்றில் 32 கற்கை நெறிகள் மத்திய வங்கி அலுவலர்களுக்காக மட்டும், வங்கியின் பல்வேறு திணைக்களங்களினால் அடையாளங் காணப்பட்ட பயிற்சித் துறைகளைச் சார்ந்ததாகும். தொடக்க நிலையிலும் முன்னேற்றமடைந்த நிலையிலும் காணப்பட்ட “பிரபல்யம் வாய்ந்த கணனி மென்கல கற்கைத் தொகுதியின் பயன்பாடு, மத்திய வங்கி அலுவலர்களுக்கு மற்றுமொரு பயிற்சித் திட்டத் தொகுதியை வழங்குகிறது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்குப் பயன்படக்கூடியதும், அவற்றின் அமைவுகளுக்குப் பொருத்தமானதுமான செயற்றிட்டங்கள் தொடர்பில் 19 நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. ஏனைய துறைகளை மனதிற்கொண்டு பிரபல்யமான துறைகளின் காலத்துக்கேற்ற பிரதான விடயங்களில் பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பன வடிவமைக்கப்பட்டுள்ளன.

பணித்துறை அமைப்புகளுக்கான முழுத்தர முகாமைத்துவம், பயன்தரு மூலவள ஒதுக்கீடு, அமைப்புச் சீராக்கச் செயல்முறை, வளர்ந்துவரும் உலக சந்தைப் பொருளாதாரங்கள் என்பன 1996 இற்காக அட்டவணையிடப்பட்ட சில புதிய நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

1995 இல் யூலையில் கல்லூரியினால் வெற்றிகரமாக நடாத்தப்பட்ட தெற்காசிய நாடுகளுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி மீதான அப்ரகா – சென்றப் பன்னாட்டு கற்கை நெறியில் 30 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இனிவரும் ஆண்டுகளில் இதையொத்த இன்னும் சில நிகழ்ச்சித் திட்டங்களைக் கூடுதலாக நடத்த எதிர்பார்க்கப் படுகிறது.

மத்திய வங்கி ஊழியர்களுக்கான ஆங்கில மொழிக்கான சுய பயில்வு நிலையம் 1994 ஏப்பிரல் தொடக்கம் தொழிற்பட்டுவருகின்றது. எதிர்காலத்தில் புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

வங்கித் தொழில் மற்றும் ஏனைய நிதியியல் துறைகளின் பயிற்சித் தேவைகளை மதிப்பீடு செய்யும் பொருட்டு ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கும், நாட்டில் உருவாகிவரும் பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்து செல்லத்தக்க நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் அரசு, தனியார்துறை இரண்டிற்குமான பயிற்சி மற்றும் பயிற்சிக்குப் பிந்திய செயலாற்றம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி ஆய்வுகளில் ஈடுபடுதல் என்பனவற்றிற்குப் பொறுப்பாக இருந்தது. சிறு

அளவு தொழில் முயற்சியாளர்களுக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கும்பொருட்டு தொழில்முயற்சி ஆலோசனைக்குழு பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

## ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உதவுதொகைகள், தண்டப்பணங்கள் நிதியத்தின் பணத்தினை முதலீடு செய்வதன் மூலம் பெறப்படும் வருவாய் மற்றும் பதிவுசெய்யப்பட்ட தொழில் தருநர்களினதும் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் பொருத்தமான கணக்குகளைப் பேணல், உறுப்பினர்களின் நன்மைகளை மீளளிப்புச் செய்தல் ஆகிய பொறுப்புக்கள் மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேமநிதியத் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் வலுப்படுத்தல் ஆகிய விடயங்களில் ஈடுபட்டுள்ள தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் அந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### உதவுதொகைகள்

தற்காலிகத் தரவுகளின்படி 1995 இல் நிதியத்தினால் பெறப்படட உதவுதொகைகள் 1994 இன் ரூ. 7.4 பில்லியனுக்கெதிராக ரூ. 8.2 பில்லியனாக விளங்கியது. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவுதொகை மட்டத்தினைவிட 11 சதவீத அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது.

### உறுப்பினர் நிலுவை

ஆய்விற்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கப்படுமுன்னர் 1995 திசெம்பர் 31 இல் உறுப்பினர் நிலுவைகள் ரூ. 81.5 பில்லியனாக விளங்கியதுடன் இது 1994 இனதைவிட ரூ. 5.8 பில்லியன் அல்லது 8 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

### முதலீடுகள்

ஆய்விற்குரிய ஆண்டில் நிதியம் ரூ. 45 பில்லியன் கொண்ட தொகைளை அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள், வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை, மற்றும் அரச உத்தரவாதப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள் என்பனவற்றில் முதலீடு செய்தது. 1994 இன் முதலீட்டு மட்டங்களைவிட இது ரூ. 7 பில்லியன்கொண்டதொரு அதிகரிப்பாகும். 1995 திசெம்பர் 31 இல் நிதியத்தின் வசமிருந்த மொத்த முதலீடுகள் ரூ. 100 பில்லியன்களாக மதிப்பிடப் பட்டதுடன் இது 1994 இன் மட்டத்தினைவிட ரூ. 19 பில்லியன்கொண்டதொரு அதிகரிப்பாகும்.

### முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்

1989 ஆம் ஆண்டின் உண்ணாட்டிறைச் சட்டத்தின் நியதிகளின்படி, ஊழியர் சேமநிதியத்திற்கு அளிக்கப்பட்டிருந்த வருமானவரி விலக்களிப்பு மீளப் பெறப்பட்டது. இதன்படி, 1989 ஏப்பிறல் 1 ஆம் நாளுக்குப்பின்னர் பெறப்பட்ட முதலீடுகளிலிருந்தான அனைத்து வருவாய்களும் முதலீட்டு வருமானத்தின் 10 சதவீத தடுத்து வைக்கும் வரிக்கு உட்பட்டதாகும். 1995 இல் முதலீட்டு வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட மொத்த தடுத்துவைக்கும் வரியும், இவ்வாண்டில் செலுத்தப்பட்ட நிலுவைகளும் ரூ. 1.8 பில்லியன்களாக விளங்கின.

1995 இல் இம்முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் 1994 இன் ரூ. 11 பில்லியன்களுக்கெதிராக ரூ. 14 பில்லியன்களாக விளங்கியது.

### மீளளிப்புக்கள்

1995இல் உறுப்பினர்களின் மீளளிப்பு நன்மைகளின் வடிவில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1994 இன் ரூ. 2.6 பில்லியனுக்கெதிராக ரூ. 2.7 பில்லியனாக விளங்கியது. இது 4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. ஆய்விற்குரிய ஆண்டில் நன்மைகளின் மீளளிப்புக்கான உரிமக் கோரல்கள் 1994 இல் தீர்க்கப்பட்ட 49,986 உரிமைக் கோரல்களுக்கெதிராக 52,258 ஆகக் காணப்பட்டது.

### ஊ. சே. நி. வீடமைப்புக் கடன் திட்டம்

வீடமைப்பு நோக்கங்களுக்காக கடன் வழங்கும் நிறுவனங்கள சிலவற்றிலிருந்து தமது நிலுவையிலுள்ள தொகையில் 75 சதவீதம் வரையிலான கடனைப் பெறுவதற்கு இயலச் செய்யும் வகையில் ஊழியர் சேமநிதியச் சட்டம் 1988 இன் 42 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களாவன வீடமைப்பு அபிவருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை, அரசஈட்டு முதலீட்டு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பனவாகும்.

1995 திசெம்பர் 31 இல் சம்பந்தப்பட்ட தொழில் அலுவலர்களுக்கு ஊழியர் சேமநிதியத் திணைக்களம் நிலுவைகளை உறுதிப்படுத்தும் 59,880 விண்ணப்பங்களைச் செயல்முறைப்படுத்தி அனுப்பிவைத்துள்ளது.

## செலாவணிக் கட்டுப்பாடு

1994 மாச்சு 15 ஆம் நாளன்று இலங்கை பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்புரை VIII இன் நிலையை ஏற்றுக்கொண்டதன் விளைவாக, 1995 இல் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் மூலதனக் கணக்கு மாற்றல்களுடன் தொடர்பான விண்ணப்பங்களுக்கு ஒப்புதல்கள் வழங்குவதற்கும் நடைமுறைப் பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிப்பதற்கும் முக்கியமாக ஐ.அ. டொலர் 20,000த்திற்குக் கூடுதலான அல்லது அதற்குச் சமமான மற்றைய வெளிநாட்டு நாணயங்களில் வழங்குவதற்கும் மட்டுப்படுத்தப் பட்டன.

## வதிவுடைய கூட்டு நிலையங்களின் வெளிநாட்டு முதலீடுகள்

1995 இல் இலங்கைக் கூட்டு நிலையங்கள் பல, தமது கூட்டு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள நாடுகளில் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்காக வெளிநாடுகளிலும் அதேபோன்று அயல்நாடுகளிலும் இணைந்த தொழிற் முயற்சிகளை நிறுவுவதற்கான முதலீடுகளுக்கு அனுமதிக்கப்பட்டன. மாலைதீவுகளிலும், சிங்கப்பூரிலும் உல்லாச சுற்றுலாவிடுதிகளின் கட்டுமானத்திற்காக முகாமைத்துவக் கூட்டு நிலையங்களுக்கு முதலீடுகள் அனுமதிக்கப்பட்டன. சில கட்டுமான நிறுவனங்களுக்கு, வெளிநாட்டுக் கட்டுமான கூட்டுநிலையங்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவும் வெளிநாடுகளில் துணை ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

## வெளிநாட்டு நாணயக் கடன்கள்

ஏற்றுமதிக் கட்டளைகளை நிறைவேற்று வதற்காக பெறுமதி கூட்டப்பட்ட வடிவத்தில் உள்நாட்டு உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான வெளிநாட்டு நாணயக் கடன் விண்ணப்பங்கள் ஒவ்வொன்றாக ஆராயப்பட்டு அதன் அடிப்படையில் தொடர்ந்து ஒப்புதலளிக்கப்பட்டன.

## பொதுப்படுகடன்

நாணய விதிச்சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளுக்கு இணங்க அரசாங்கத்தின் சார்பில் வங்கி தொடர்ந்தும் பொதுப்படுகடன் முகாமைத்துவத்தினை மேற்கொண்டு வருகின்றது. பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட முக்கிய படுகடன் கருவிகளாக அரச பிணைகள், ரூபாக் கடன்கள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் என்பன விளங்கின. அதன் பொறுப்புக்களை நிறைவேற்றும் விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டுப்படுகடன் வழங்கலிலும் பணிக்கொடுப்பனவுகளிலும், அரசின் வெளிநாட்டுப்படுகடன் பணிக்கொடுப்பனவு, மத்திய வங்கிப் பிணைகள் மற்றும் அரசஈட்டு முதலீட்டு வங்கியின் தொகுதிக்கடன்கள் என்பனவற்றின் வழங்கலிலும் தொடர்ந்தும் ஈடுபட்டது. முதலாந்தர வணிகர் முறையினூடாக படுகடன் பிணையங்கள் சந்தையை அபிவிருத்தி செய்வதற்காக 1995 இல் பொதுப்படுகடன் திணைக்களம் முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## கொள்கை வழிமுறைகள்

ஆய்விற்குரிய ஆண்டில், அரச படுகடன் கருவிகளுக்கான சந்தையை முன்னேற்றுவதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. 1992 யூலையில் மேற்கொள்ளப்பட்ட பொதுப்படுடன் பிணையங்களின் செயலாற்றம் பற்றிய ஆய்வு 1994 நவம்பரில் வடிவமைக்கப்பட்டு 1995 யூனில் முதற்தடவையாக மேற்கொள்ளப்பட்டது. நாணயச் சந்தையில் சிறப்பாக படுகடன் பிணையங்கள் சந்தையின் நடைமுறை அபிவிருத்திகளின் மீது தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் பொருட்டு முதலாந்தர வணிகர்களுடன் வாராந்தக் கூட்டங்களை பொதுப்படுகடன் திணைக்களம் நடத்தியது. நிலையான வருமான பிணைகளில் முதலீட்டாளர்களையும் முதலாந்தர வணிகர்களையும் தூண்டுவதற்காக ப.அ.ஐ.நா. முகவரின் நிதியியல் சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் ஒத்துழைப்புடன் 1995 இல் ஆய்வரங்குகளையும் செயலமர்வுகளையும் பொதுப்படுகடன் திணைக்களம் ஒழுங்குசெய்தது. முதலாந்தர வணிகர்கள் அவர்களது வர்த்தகம் தீர்ப்பனவு நடவடிக்கைகள், இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கின்ற தகவல்கள் என்பனவற்றிற்கு கணனிமயப்படுத்தப்பட்ட முறையைப் பயன்படுத்துமாறு ஊக்குவிக்கப்பட்டனர். பொதுப்படுகடன் திணைக்களம் அலுவலகத்தில்

மென் கணனித்தொகுதியொன்றை அபிவிருத்தி செய்து அதனை முதலாந்தர வணிகர்கள் அவர்களது சந்தை நடவடிக்கைகளைப் பற்றிய விபரங்கள் மீதான தகவல்களை பதிவு நாடாக்களில் அறிவிப்பதற்காக வழங்கியது. முதலாந்தர வணிகர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள் தொடர்பாக பொதுப்படுகடன் திணைக்களத்தில் தரவுத் தளமொன்று நிறுவப்பட்டது. 1995 இல் வணிகர்களைக் கண்காணிக்கவும் முதலாந்தர வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளுடன் தொடர்பான பகுப்பாய்வு வேலைகளுக்கும் பொதுப்படுகடன் திணைக்களம் இத்தரவுத்தளத்தைப் பயன்படுத்தியது. அத்தகவல்களின் அடிப்படையில் முதலாந்தர, இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலும் முதன்மை வணிகர்களின் நடவடிக்கைகள் பற்றி காலத்திற்குக்காலம் அவர்களுக்கு அறிக்கைகளை வெளியிடத்தொடங்கியது.

அரசினதும் மத்திய வங்கியினதும் பிணையங்களின் சந்தையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பொதுப்படுகடன் திணைக்களம் நாணய விதிச்சட்டத்திற்கும் பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்திற்கும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்திற்கும் திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1995 இல் திருத்தங்கள் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதுடன். இத்திருத்தங்கள் மத்திய வங்கியுடன் வங்கியல்லா முதன்மை வணிகர் நடைமுறைக் கணக்குவசதிகளைத் திறப்பதுடன் தொடர்பான ஏற்பாடு, புதிய நடுத்தரகால, நீண்டகாலக் கருவியானதும் பத்திரத்துடன் அல்லது பத்திரமற்ற வடிவில் ஏதாவது முதலாந்தர வணிகர்களினூடாக பொதுமக்களுக்கான ஏலத்தின் அடிப்படையில், திறைசேரி முறிகளின் வழங்கல் சான்றற்ற அடிப்படையில் திறைசேரி உண்டியல்களை வழங்கல் என்பனவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

## தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

1995 இறுதியில் மொத்தமாக வெளிநின்ற மொத்த அரசபடுகடன் ரூ. 6,163,820 இலட்சமாக இருந்தது. 1994 இறுதியில் இருந்த நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் இது ரூ. 778,170 இலட்சங்கொண்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. 1995 இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் பொறுப்புக்கள் ரூ. 3,444,750 இலட்சமாக விளங்கி 1994 இறுதியினதைவிட ரூ. 425,120 இலட்சங்கொண்ட அதிகரிப்பினைக்காட்டியது. இதில் ரூ. 286,760 இலட்சம் செலாவணி வீதங்களின் அசைவுகளின் காரணமாக ஏற்பட்டதாகும். மொத்த வெளிநின்ற அரசபடுகடனில் வெளிநாட்டுப் படுகடன் 55.9 சதவீதத்திற்கு வகைகூறியவேளையில் மிகுதி 44.1 சதவீதத்தினை உள்நாட்டுப்படுகடன் கொண்டிருந்தது. அட்டவணை 11.14 மொத்தப்படுகடனின் உள்ளமைப்பை எடுத்துக்காட்டுகின்றது.

## திறைசேரி உண்டியல்கள்

1995 இல், திறைசேரி உண்டியல்கள் அரசின் உள்நாட்டுப்படுகடன்களின் முக்கியமான கருவியாக அமைந்தன. 1995 இறுதியில் வெளிநின்ற மொத்த திறைசேரி உண்டியல்கள் ரூ. 1137,710 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் ரூ. 988,960 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 148,750 இலட்ச அதிகரிப்பினைக் காட்டிய வேளையில் ஆய்விற்குரிய ஆண்டில் ரூ. 164,750 இலட்சத்திற்கு புதிய வழங்கல்கள் வழங்கப்பட்டமையும் ரூ. 16,000 இலட்சம் கொண்டதொகை முதிர்ச்சியடைந்தமையுமே காரணமாகும். 1995 இல் திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட உச்சஎல்லை ரூ. 1,250,000 இலட்சத்தில் மாற்றமின்றியிருந்தது. திறைசேரி உண்டியல்களினதும் மத்திய வங்கிப்பிணைகளினதும் முதலாந்தர ஏலங்களை மேம்படுத்தும் பொருட்டு 1995 மே முதல் வாரத்திலிருந்து பின்வரும் வழிமுறைகளை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது.

(அ) 1995 மேயிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்கு அரசதுறை நிறுவன முதலீட்டாளர்களின் போட்டியற்ற விலைக் கோரல்களுக்கு இடமளித்தல்.

### அட்டவணை II - 14

### மொத்தப் பொதுப்படுகடன் உள்ளடக்கம்

| | 1994 முடிவில் உள்ளவாறு ரூ.ப.இ | % | 1995 முடிவில் உள்ளவாறு ரூ.ப.இ | % |
|---|---|---|---|---|
| உள்நாட்டுப்படுகடன் | 236,602 | 43.9 | 271,906 | 44.1 |
| திறைசேரி உண்டியல்கள் | 98,896 | | 113,771 | |
| ரூபாப்பிணைகள் | 137,554 | | 157,928 | |
| திறைசேரி உண்டியல் சான்றிதழ்கள் | 145 | | 200 | |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 7 | | 7 | |
| வெளிநாட்டுப்படுகடன் | 301,963 | 56.1 | 344,475 | 55.9 |
| மொத்தம் | 538,565 | 100.0 | 616,382 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஆண்டிற்கு 13.0 சதவீத நறுக்கு வீதத்தினைக் கொண்டிருந்தவேளையில் 1995 ஒகத்திலும் செத்தெம்பரிலும் வழங்கப்பட்ட இறுதி இரு வழங்கல்களும் ஆண்டிற்கு 15.5 சதவீத நறுக்கு வீத்தினைக் கொண்டிருந்தன. 1995 இன் வழங்கல்களுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி ஆண்டு விளைவுவீதம் 14.08 சதவீதத்திற்கும் 18.16 சதவீதத்திற்கு மிடையிலான வீச்சில் காணப்பட்டது.

### அரசஈட்டு முதலீட்டு வங்கித் தொகுதிக் கடன்கள்

1995 மாச்சில் ரூ. 5,000 இலட்சம் தொகை கொண்ட அரசஈட்டு முதலீட்டு வங்கித் தொகுதிக்கடன்களை ஆண்டிற்கு 14.5 சதவீத வட்டியில் 5–7 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்துடன் வழங்கியது. இத்தொகுதிக்கடன் முழுவதையும் தேசிய சேமிப்பு வங்கி கொள்வனவு செய்தது.

### பிரதேச அலுவலகங்கள் – மாத்தறை, அனுராதபுரம், மாத்தளை

1995 இல் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள மத்திய வங்கியின் மூன்று பிரேதச அலுவலகங்களும் அவற்றுக்கு ஒதுக்கப்படட வழமையான மத்திய வங்கித் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு மேலதிகமான அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டன. பிரதேச அலுவலகங்களின் முக்கிய நடவடிக்கைகளில் நாணயத் தொழிற்பாடுகள், காசோலைக் தீர்ப்பனவு நடவடிக்கைகள், தரவு சேகரிப்பு, பயன்மிக்க பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கைகளைப் பரிசோதித்தல் பிரதேச அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு உதவுதல் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அரச திணைகளங்கள் மற்றும் முகவர்கள் அமைப்புக்களுடன் இணைப்பை ஏற்படுத்துதல் என்பன முக்கியமானவையாகும்.

மாத்தறைப் பிரதேச அலுவலகம் சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம், தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் மற்றும் உள்நாட்டு உண்டியல் திட்டம் என்பனவற்றுடன் தொடர்பாக நடவடிக்கைகளைக் கையாண்டது. பிரதேச அலுவலகம் இக்கொடுகடன் திட்டங்களின்மீது ஆய்வரங்குகளை நடாத்தியதுடன் இச்செயற்றிட்டங்களின் கீழான மேற்பார்வைக்கும் கொடுகடன் மீளமைப்பிற்கும் உதவியது. பிரதேச அலுவலகம் பல ஆய்வரங்குகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் செயலமர்வுகள் அதேபோன்று பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை ஒழுங்கு செய்தமையின் மூலமாக இப்பிரதேசத்திலுள்ள அரச திணைக்களங்கள், வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய முகவர்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றைய அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கும் உதவியது. பிரதேச அலுவலகம் தீவு முழுவதற்குமான சுயவேலைவாய்ப்பு கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் பின்தொடர் வேலைகளைத் தொடர்ந்து மேற்கொண்டதும் இக்கடன்கள் தொடர்பாக 83 சதவீத மீட்பு வீதத்தினையும் பதிவுசெய்தது. இவ்வாண்டில் பிரதேச அலுவலகப் பி.கி.அ. வங்கிகளையும் பரிசோதித்தது.

அநுராதபுர பிரதேச அலுவலகம், செயற்றிட்டங்களை வினைத்திறன் மிக்க முறையில் நிறைவேற்றவும் அதேபோன்று உள்ளார்ந்த வளம்மிக்க தொழில் முயற்சியாளர்களுக்கும் தேவையான பயிற்சியை வழங்கும்பொருட்டும் பல அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் 4,106 பேர் பங்குபற்றிய 85 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. பிரதேச அலுவலகம் அநுராதபுர மாவட்டத்திலுள்ள கைத்தொழில்கள் பற்றிய அளவீட்டினை மேற்கொண்டது. நேகம்பக என்ற இடத்தில் மத்திய வங்கியினால் தொடக்கிவைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை பிரதேச அலுவலகம் ஒருங்கிணைத்ததோடு திரப்பன, கெக்கிராவ ஆகிய இடங்களில் கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டிலும் பங்குபற்றியது. தொழில்நுட்பத் தேர்ச்சியை முன்னேற்றுவதன் மூலம் இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் நோக்குடன் பிரேதச அபிவிருத்தி செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றமையானது உற்பத்தியாற்றலை அதிகரிப்பதுடன் கிராமமட்டத்தில் அமைப்புக்களையும் வலுப்படுத்துகின்றது. பிரதேச அலுவலகம் அநுராதபுரம், பொலனறுவை குருநாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள உயர்தரவகுப்பு மாணவர்களுக்காக கல்விசார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. அத்துடன் இப்பிரதேசத்திலுள்ள பி.கி.அ. வங்கிகளின் பரிசோதனைகளையும் மேற்கொண்டது.

மாத்தளை அலுவலகம் கடன் நன்மைபெறுவோருக்கும் வங்கியாளர்களுக்குமான பயிற்சியில் மிகுந்த கவனம் செலுத்தியது. இவ்வாண்டில் பண்ணை அபிவிருத்தி, பெரிய வெங்காயத்தைக் களஞ்சியப்படுத்தல்,

பத்திக்கைத்தொழில் மற்றும் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை என்பனவற்றை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. உயர்தர வகுப்பு மாணவர்களுடன் தொடர்புபட்ட விடயங்களின்மீது எட்டு ஆய்வரங்குகளும் நடத்தப்பட்டன. எல்லாமாக 1,288 பேர் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றினர். 1995 இல் மாத்தளை பிரதேச அலுவலகம் பண்ணை அபிவிருத்தி, பண்ணைப்பொறி, சிறுகைத்தொழில்கள் என்பனவற்றை உள்ளடக்கிய செயற்றிட்டங்களுக்காக சிறு அளவு உற்பத்தியாளர்களிடமிருந்து கடன்களக்கான விண்ணப்பங்களைப் பெற்றது. இவ்வுற்பத்தியாளர்களுக்கு உதவும்பொருட்டு பிரதேச அலுவலகம் 97 செயற்றிட்ட சாத்தியவள அறிக்கைகளைத் தயாரித்தது. தேவையான நடவடிக்கைகளுக்காக இப்பிரதேசத்திலுள்ள நிதியியல் நிறுவனங்களுக்கு இவ்வறிக்கைகள் அனுப்பிவைக்கப்பட்டன. பிரதேச அலுவலகம் மூன்று சில்லு வாடகை வண்டிகளின் கொள்வனவிற்கான கடன் விண்ணப்பத்தாரிகள் வங்கிகளிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு உதவியது. பிரதேச அலுவலகம் மாத்தளை சுயவேலைவாய்ப்பு ஊழியர் சங்கம் மூன்று கண்காட்சிகளையும் விற்பனைகளளையும் நடாத்த உதவியது. அலுவலகம் சிறுஉடமையாளர் தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டக் கொடுகடன் திட்டம், நிரந்தர நீண்டகால பயிர் அபிவிருத்தி கொடுடன் திட்டம் போன்ற ஏனைய செயற்றிட்டங்களுடன் தொடர்பான அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. அலுவலகம் அப்பிரதேசத்திலுள்ள பி.கி.அ. வங்கிகளின் பரிசோதனைகளையும் மேற்கொண்டது.

பிரதேச அலுவலகங்கள் இப்பிரதேசத்திலுள்ள வர்த்தக வங்கிகளுக்கு பிரதேச காசோலைத் தீர்ப்பனவுவசதிகளையும் வழங்கின.

## செயலகம்

செயலகத் திணைக்களம் நிதி, சட்டப்பணிகள் வழங்கல்கள், பயணம் மற்றும் ஏனைய பொதுப்பணிகள் ஆகிய விடயங்களில் வங்கியின் அனைத்து நிருவாகப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டது.

1995 இல், சட்டவிடயங்களில் பல்வேறு திணைக்களங்களுக்கும் மதியுரை வழங்கப்படுவது போன்ற சட்டப்பிரிவினால் வழங்கப்படும் பொதுவான பணிகளுக்கு மேலதிகமான, பின்வரும் சட்டவாக்கங்களின் வரைவு வேலைகளிலும் இப்பிரிவு கவனம் செலுத்தியது.

1. 1995 இன் 26 ஆம் இலக்கம் கொண்ட நாணயவிதி (திருத்தச்) சட்டம்.

2. 1995 இன் 31 ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (திருத்தச்) சட்டம்.

3. 1995 இன் 32 ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் பிணைகள் (திருத்தச்) சட்டம்.

4. 1995 இன் 33 ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம்.

## தகவலும் வெளியீடுகளும்

தகவல் சேகரிப்பாளர் மற்றும் பரப்புவர் என்றவகையில் வங்கியின் பங்கு பெருமளவில் தகவல் திணைக்களத்தினால் கொண்டு நடாத்தப் பட்டது. தகவல் சேகரிப்பு செயல்முறையின்போது உள்நாட்டு ரீதியிலும் பன்னாட்டு ரீதியிலும் சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை உள்ளடக்குவதில் பெரும் முயற்சிகளை மேற்கொண்டதுடன் பொருளாதார அபிவிருத்தியினை ஆய்வு செய்வதில் ஈடுபாடுள்ள மாணவர்கள், ஆசிரியர், வங்கியாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஏனையோருக்கும் வெளியிடப்பட்டதும் வெளியிடப்படாததுமான தகவல்களை வழங்கியது.

தகவல் திணைக்களத்தினூடாக பின்வரும் மத்திய வங்கி வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

1. 1994 இன் ஆண்டறிக்கை (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

2. பொருளாதார அளவீடு - 1995 முதலரைப்பகுதி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

3. பொருளாதார செய்தித்திரட்டு (ஆங்கிலம்)– இருமாதமொருமுறை

4. மாதாந்தச் செய்தித்திரட்டு (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

5. சமூகப் பொருளாதார தரவு மடிப்பு - 1995 (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)

6. பொருளாதார சமூக புள்ளிவிபரவியல் 1995 (ஆங்கிலம்)

7. தர்ஷன தொகுதி 1.

மேலதிகமாக, திணைக்களம் தனது சொந்த வெளியீடுகளான சட்டகன, செய்தி அளவீடு, வங்கிபுவத் ஆகிய சஞ்சிகைகளைத் தொடர்ந்தும் வெளியிட்டது. சிங்களத்தில் வெளியிடப்பட்ட சட்டகனவும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட செய்திஅளவீடும் க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கவனத்தை பெரிதும் ஈர்த்தது. தகவல்திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் பெருந்தொகையான க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கவனத்தைக் கவர்ந்தது.

பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்புவதற்காக செவிப்புல, கட்புல சாதனங்கள், பத்திரிகை வெளியீடுகள் கருத்தரங்குகள், புத்தகக் கண்காட்சிகள் என்பனவற்றையும் திணைக்களம் தொடர்ந்தும் பயன்படுத்தியது. திணைக்களத்தின் வீடியோப் பிரிவு தகவல் திணைக்களம் தொடர்பான செய்திப் படங்களையும் தயாரித்ததுடன் இது மத்திய வங்கியின் கருத்தரங்குகளையும் முக்கிய நிகழ்வுகளையும் உள்ளடக்கியிருந்தது. கட்புல ஓவியப்பிரிவு முகப்பு அட்டைப்படங்களையும் கையேடுகளையும் விளம்பரச் சுவரொட்டிகளையும் தொடர்ந்தும் வடிவமைத்தது.

மத்திய வங்கியின் அச்சிடல் வேலைகளில் 90 சதவீதத்திற்கு மேலானவை மத்திய வங்கியின் அச்சகத்தினால் கையாளப்படுகின்றன. இவ்வாண்டில் அச்சகம் 380 அச்சிடல் பணிகளை வெற்றிகரமாக முடித்தது.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதார மற்றும் நிதியியல் புள்ளிவிபரங்களின் சேகரிப்பிற்கும் பகுப்பாய்விற்கும் பொறுப்பாக இருப்பதுடன் கொள்கை வடிவமைப்பில் ஆளுநரினதும் நாணயச் சபையினதும் வழிகாட்டல்களுக்கான பொருளாதார ஆராய்ச்சிகளை நடத்தியதுடன் பொதுமக்களுக்கான தகவல்களையும் வழங்கியது. திணைக்களம் ஆண்டறிக்கை, மாதாந்த செய்தித்திரட்டு, 1995 இன் முதலரைப்பகுதிக்கான பொருளாதார அளவீடு, பொருளாதாரச் செய்தித்திரட்டு என்பனவற்றின் வெளியீடுகளுக்குப் பொறுப்பாக இருந்ததுடன் அதேபோன்று வாராந்த நிதியல் புள்ளிவிபரங்களை செய்தித்தாள்கள் மூலம் பொதுமக்களுக்கு வழங்கியது. திணைக்களம் 1995 இல் இக்கடமைகளைக் கவனித்ததுடன் பொறுப்பாகவும் இருந்தது. அத்துடன் வரவு செலவுத்திட்ட உரையைத் தயாரிப்பதற்கான ஆரம்ப உள்ளீடாக நிதியமைச்சரால் வேண்டப்படும் செத்தெம்பர் - 15 அறிக்கையையும் திணைக்களம் வழமைபோன்று சமர்ப்பித்தது.

மேலும் திணைக்களம் பன்னாட்டு பண்ட விலைகள் மீதான வாராந்த குறிப்பு, இறக்குமதி ஏற்றுமதிகள் மீதான மாதாந்த வர்த்தக புள்ளிவிபரங்கள் பன்னாட்டுச் சந்தைகளில் தேயிலை, இறப்பர் ஏலங்களின் மீதான வாராந்த மாதாந்த அறிக்கைகள், மாதாந்த பண்ட ஆய்வுகள் என்பனவற்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தியதுடன் பல்வேறுபட்ட பொருளாதார விடயங்கள் பற்றிய கவனிப்புக்களையும் விதந்துரைப்புக்களையும் நாணயச்சபைக்கும் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து அமைச்சுக்களுக்கும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கும் அறிக்கையாக வழங்குகின்றது. இவ்வாண்டில் கைத்தொழில் உற்பத்திகள் மீதான அரையாண்டு மற்றும் ஆண்டு அளவீடுகள் நடத்தப்பட்டன. திணைக்களம் ப. நா. நிதியத்திற்கு ஒழுங்கான அடிப்படையில் தொடர்ந்தும் தரவுகளை வழங்கியது. திணைக்களம் 1995 மாச்சிலும் திசெம்பரிலும் இரு ப. நா. நிதிய பேராளர் குழுக்களுடன் அரசின் ஆலோசனைகளுள் இணைப்பை ஏற்படுத்தியது. மேலும் ஏனைய பன்னாட்டு நிறுவனங்களுக்கான தரவு ஏற்பாடு அத்தகைய நிறுவனங்களுடனான உறவுமுறைகளை இணைத்தல் என்பன வழமைபோன்று நடைபெற்றன. திணைக்களம் ப. நா. நிதியத்தின் ஒத்துழைப்புடன் "நிதியியல் நிகழ்ச்சித் திட்டமிடலும் கொள்கைகளும்" என்ற ப. நா. நிதியியல் பிராந்திய பயிற்சி நெறியினை 1995 மேயில் கொழும்பில் நடாத்தியது.

திணைக்களத்தின் அலுவலர்கள் நாணய தொழிற்பாட்டுப் பிரிவு, திறைசேரி உண்டியல் விலைக்கோரல்குழு, சென்மதி நிலுவைக்குழு, செலாவணிவீதக்குழு போன்ற கொள்கை விடயங்கள் பற்றிய உள்ளகக் குழுக்களிலும் பணியாற்றினர்.

## அளவீடுகளும், தரவு சேகரிப்புக்களும்

புள்ளி விபரத்திணைக்களம் சமூகப் பொருளாதாரத் தரவுகளை சேகரித்தல் மற்றும் அவற்றினை வெளியிடல் ஆகிய பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இவ்வாண்டிலும் மாதிரி அளவீடுகளை நடாத்துதல், விலைகள் மற்றும் கூலிகள், தேசிய கணக்கு, தொழில் நிலை, மற்றும் இறக்குமதி சம்பந்தமான தரவுகளை சேகரித்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன.

## நுகர்வோர் நிதி அளவீடு 1996/97

1996 ஆம் ஆண்டிலும் 1997 ஆம் ஆண்டிலும் நடாத்துவதற்கு அட்டவணையிடப்பட்ட நுகர்வோர் நிதி அளவிடு சம்பந்தமாக தொடக்க வேலைகள் இவ்வாண்டில் முற்றுப் பெற்றன. இது இந்த அளவீடுகளின் ஏதாவது தொடராகும்.

முன்மொழியப்பட்ட இவ்வளவீட்டானது நாட்டின் குடும்ப அலகுகளின் சமூகப் பொருளாதார தரவுகளைச் சேகரிப்பதாகும். இவ்வளவீட்டின் மூலம் பெறப்படும் தரவுகள் குடித்தொகையின் சமூகப் பொருளாதார நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அடிப்படையினை வழங்குகின்றன. இந்த அளவீடானது குடிப்பரம்பலின் பண்புகள், தொழில் வாய்ப்பு, தொழில் வாய்ப்பின்மை, ஊட்டச்சத்து, வருமானப் பகிர்ந்தளிப்பு, வீடமைப்பு மற்றும் கல்வி சம்பந்தமான தகவலுக்கான முக்கிய மூலமாகவும் அமைகின்றது.

## நாடளாவிய தரவு சேகரிப்புத் திட்டம்

1978 இல் தொடக்கி வைக்கப்பட்ட நாடளாவிய தரவுச் சேகரிப்புத் திட்டம் 1995 இலும் தொடர்ந்து தொழிற்பட்டதன் மூலம் தனது பதினேழாவது ஆண்டு தொழிற்பாட்டினைப் பூர்த்தி செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் நுகர்வுப் பொருட்களினதும் மற்றும் வேளாண்மை உள்ளீடுகளினதும் சில்லறை விலைகள், முறைசாராத்துறையில் உள்ள நெல், தேயிலை, இறப்பர், தெங்குப் பயிர்ச் செய்கையினதும், சிறிய அளவிலான கட்டுமான நடவடிக்கைகளினதும் நாளாந்த கூலி வீதங்கள் என்பனவற்றினதும் தரவுகள் நாடுமுழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங்களின் கிரமமான அடிப்படையில் தொடர்ந்தும் சேகரிக்கப்பட்டன. நேர காலத்துடன் எச்சரிக்கைவிடுக்கும் முறையொன்றாகப் பயன்படுத்துவதற்காக உற்பத்திப் போக்குகள், உற்பத்தியாளர் விலைகளில் தளம்பல்கள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்பன தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் நோக்கில் இவ்வாண்டில் இத்திட்டத்தின் செயல் எல்லை விரிவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சேரிக்கப்பட்ட தரவுகள் விலைகளும் கூலிகளும் புள்ளிவிபரவியல் என்ற ஆண்டு வெளியீட்டில் தரப்படுகின்றது.

## தேசிய கணக்குகள்

தேசிய கணக்குகளை மதிப்பிடலுடன் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. புள்ளி விபரத்திணைக்களம் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர மூலங்களினது தரவுச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளது. தேசிய கணக்குகளை காலாண்டு அடிப்படையில் மதிப்பிடும் பொருட்டு தாமதமின்றி தரவுகள் சேகரிக்கப்படும். நடைமுறையாண்டினை பெருமளவில் அடிப்படையாகக்கொண்டு தேசிய கணக்குகளைத் தயாரிப்பதற்காக மதிப்பீட்டுச் செயல்முறையினை மீளாய்வு செய்வதற்கான தொடக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1993 இல் ஐக்கிய நாடுகள் புள்ளிவிபரவியல் அலுவலகத்தில் வெளியிடப்பட்ட தேசிய கணக்குகளின் திருத்திய முறையின் வழிகாட்டல்களுக்கு இணங்க மதிப்பீடுகளின் மீளாய்வு 1995 இல் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

## இறக்குமதிகளின் கண்காணிப்பு

இறக்குமதி எதிர்வுகூறல் நோக்கத்திற்காக வர்த்தக வங்கிகளிலிருந்தான நாணயக் கடிதங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளினூடாக திணைக்களம் இறக்குமதிகளைத் தொடர்ந்தும் கண்காணித்தது.

## தொழில் நிலைப் புள்ளி விபரம்

அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்துறை என்பனவற்றின் தொழில்நிலைப் போக்குகளை உறுதியாக அறிந்து கொள்ளுவதற்காக அரசதுறையின் தொழில்நிலை மீதான அளவீடு 1995 இலும் தொடர்ந்தது. தனியார்துறையின் தொழில்நிலை பற்றிய மதிப்பீடுகள் இல்லாமையின் காரணமாக நன்கமைந்த தனியார்துறையின் தொழில்நிலைப் போக்குகளை உறுதியாக அறிந்து கொள்ளுவதற்கு ஊழியர் சேமநிதியம், ஏனைய சேமநிதியங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனத்துடன் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் பதிவேடுகளிலிருந்து தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

## வெளியீடுகள்

திணைக்களம் "இலங்கைச் சமூகப் பொருளாதார தரவு" மற்றும் "இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள்" என்ற இரு தலைப்புக்களில் ஆண்டு வெளியீடுகள் இரண்டினை தொடர்ந்தும் வெளியிட்டது. இவை முக்கிய சமூகப் பொருளாதார மாறிலிகளின் மீதான அனைத்தையும் உள்ளடக்கிய தகவல்களை வழங்குகின்றன.

## தரவு செய்முறைப்படுத்தல்

பல்வேறு திணைக்களங்களின் பயன்பாட்டிற்காக 100 புதிய தனியார் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் வங்கிக்குள்ளே நவீனமயப்படுத்தப்பட்ட தகவல் தொழில் நுட்ப சூழ்நிலைளை உருவாக்குவதற்கும் மேலுமொரு நடவடிக்கையை இவ்வாண்டில் வங்கி மேற்கொண்டது. தனியாக அமைக்கப்பட்ட பொறிகளை பகிர்ந்தளிப்பு முறையுடன் இணைப்பதற்காக வங்கியில் வலையமைப்பு ஒழுங்குகளுக்காக வரைவு வேலைகளை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. இவ்வொழுங்குகள், கடந்த மூன்று தசாப்தங்களுக்குமேலான தரவு செய் முறைப்படுத்தல் திணைக்களத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்போதைய காலங்கடந்த மையப்படுத்தப்பட்டுள்ள முறையிலிருந்தும் கணிசமான அளவிற்கு வேறுபட்ட தன்மையை உள்ளடக்கியிருக்கின்றன.

திட்டமிடப்பட்ட பகிர்ந்தளிப்பு முறைக்காக மென்கல ஒதுக்கு பயன்பாட்டு அபிவிருத்தியை திணைக்களம் மேற்கொண்டது. நூல்களைப் பற்றிய தகவல்களை விரைவாக வழங்குவதற்கான தகவல் சீர்திருத்தமுறையொன்று நூல் நிலையத்திற்காக அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் கணனி தரவுத்தளத்தில் நூலக நூற்பட்டியல் தரவுகள் பதியப்பட்டமையின் செயற்பாடு திருப்திகரமான தாகவும் இருந்தது. தனியாள் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தனியாள் தகவல்முறை அதேபோன்று ஊழியர் விடுப்பு மற்றும் வரவுபற்றிய செயல்முறைக்கான முறையும் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் நிருவாக வேலைகளில் பயன்படுத்துவதற்காக அனைத்து திணைக் களங்களிலும் நிறுவப்பட்டது.

## இலங்கை தன்னியக்கத் தீர்வகம்

ஆய்விற்குரிய ஆண்டில் இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம் நாளொன்றிற்கு 150,000 - 300,000 காசோலைகளை கையாளத்தக்க இயலளவைக்கொண்ட புதிய பொறிகளை நிறுவியுள்ளது. நாளொன்றுக்கு 40,000 - 50,000 அளவு காசோலைகளைக் கையாளுவதற்கு பழைய பொறிகள் வடிவமைக்கப்பட்டிருந்தமையின் காரணமாக நாளொன்றிற்கு சராசரியாக 100,000 மேற்பட்ட காசோலைகளை சமாளிக்கத்தக்க விதத்தில் அவற்றினை அகற்ற வேண்டிய அவசியம் வேண்டப்பட்டது. இலங்கை தன்னியக்கத்தீர்வகத்தில் அதிகரித்த வேலைப்பளு பொறித்தொகுதியில் அடிக்கடி பிழைகளை ஏற்படுத்தியதன் மூலம் காசோலைத் தீர்ப்பனவில் தடங்கலையும் வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் வசதியீனங்களையும் தோற்றுவித்து அலுவலர்களின் அமைதியின்மைக்கும் இட்டுச்செல்லுகின்றது. புதியமுறை 1995 யூனில் தொழிற்பாட்டிற்கு வந்தது.

கொழும்பிலுள்ள இலங்கைத் தன்னியக்கத் தீர்வகத்தின் தரமுயர்த்தலைத் தொடர்ந்து தற்போதைய இடத்திலிருந்து பழைய கருவிகள், அகற்றப்படுவதுடன் கண்டியில் அவை நிறுவப்படும். இது அவசர காலங்களில் பக்கத்துணை வசதிகளை வழங்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன் குறைந்தஅளவுடனான பிரதேச தீர்ப்பனவிற்கும் உதவும். இவ்வேலை 1996 இல் நிறைவுபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நேரடிப்பற்று முறையினை உள்ளடக்குவதற்காக இலங்கைத் தன்னியக்க தீர்வகம் வங்கிகளுக்கிடையேயான இணைக்கப்படாத கொடுப்பனவுமுறையில் செயல் பரப்பை விரிவாக்கியது. நேரடிப்பற்றுமுறையின் கீழ் வாடிக்கையாளர் பட்டியலை தீர்ப்பனவு செய்வதற்காக பட்டியலிலிருக்கின்ற கூட்டுநிலையத்திற்கு வரவேண்டிய பணத்தொகையினை கணக்கிலிருந்து பற்றுவைப்பதற்கு வங்கிகளை அனுமதிப்பதன்மூலம் இலங்கை மின்சபை, இலங்கை ரெலிகொம், காப்புறுதிக்கூட்டுத்தாபனம் போன்ற பட்டியலிடுகின்ற கூட்டுநிலையங்களுக்கு வரவேண்டிய தொகையினை மாதாந்தம் சேகரிப்பதற்கு அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கமுடியும். இந்நடைமுறைகள் தற்போதுள்ள ஒழுங்குகளின் கீழ் மாதாந்தம் அல்லது குறுகிய இடைவெளிகளில் கட்டாயமாக இடம்பெற்றுவரும் கடிதத் தொடர்புகளையும் எழுத்துவேலைகளையும் கணிசமானளவிற்கு நீக்கிவிடுவதுடன் பட்டியலிடும் கூட்டுநிலையங்களின் சேகரிப்புக் செலவினையும் குறைக்கும். அதேவேளையில் வாடிக்கையாளர் வசதிகளை முன்னேற்றவும் உதவுகின்றது. இவ்வசதி அதிகரித்த விரைவு, துல்லியம் என்பனவற்றின் மூலம் வங்கித்தொழில் முறைக்கு நிதி மாற்றல் முறையை உயர்த்தும்.

நேரடிப் பற்றுமுறையின் வெற்றியானது, பட்டியலிடும் அமைப்புக்களின் ஈடுபாடு, இம்முறையை சந்தைப்படுத்த அவர்கள் எடுக்கும் நடைமுறைகள், ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் இம்முறையில் இணைவதற்கு வாடிக்கையாளர்களைத் தூண்டுதல் போன்றவற்றில் தங்கியுள்ளதுடன் அவ்வாறு மேற்கொள்ளப்படுமிடத்து நேரடிப்பற்று முறையில் இணைவதன்

நன்மைகளையும் வாடிக்கையாளர்கள் காணக்கூடியதாக இருக்கும்.

## பயிற்சி

கல்விசார்ந்த, கல்விசாரா துறைகளில் அலுவலர்களுக்கான பயிற்சி 1995 இலும் தொடர்ந்தது. கல்வி சார்ந்த பயிற்சியானது ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம் மற்றும் அதனுடன் இணைந்த விடயங்களில் பட்டப்பின்படிப்புடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது. முதுமாணி மற்றும் முனைவர் பட்டங்களுக்காக அலுவலர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாண்டில் முதுமாணிப் பட்டப்படிப்பிற்காக எட்டு அலுவலர்களும் முனைவர் பட்டப்பின்படிப்பிற்காக ஒரு அலுவலரும் வெளிநாட்டிற்குப் பயணமாகினர். இலங்கையில் பட்டப்படிப்பினைத் தொடர்வதற்காக ஒன்பது அலுவலர்களுக்கு கற்கை விடுப்பு வழங்கப்பட்டது. இவை வியாபாரம் மற்றும் நிதி, நிருவாகம் என்பனவற்றிலான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைளையும் பத்திரிகைநெறி, பொது மக்கள்தொடர்பு என்பனவற்றின் மீதான டிப்பிளோமா நெறியையும் வங்கித்தொழில் முகாமைத்துவத்தின் டிப்பிளோமாவையும் உள்ளடக்கியுள்ளன.

குறுகிய காலப் பயிற்சி நெறிகள் கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கிய பயிற்சிநெறிகள் வங்கியுடன் தொடர்புடைய குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்டவையாக இருந்தன. 1995 இல் குறுகியகாலப் பயிற்சிக்காக மொத்தம் 76 அலுவலர்கள் வெளிநாடு சென்றனர். மொத்தமாக 263 அலுவலர்கள் உள்நாட்டு நிறுவனங்களில் நடத்தப்பட்ட பயிற்சிநெறிகளிலும் கருத்தரங்குகளிலும் பங்கேற்றவேளையில் 583 அலுவலர்கள் கிராமிய வங்கித்தொழில் அலுவர் பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்பட்ட பயிற்சி நெறியில் பங்குபற்றினர்.

சில குறிப்பிட்ட வகையான ஊழியர்களின் பதவி உயர்விற்கான பரீட்சைகளையும் உயர்பதவி அலுவலர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைகளையும் திணைக்களம் தொடர்ந்து நடாத்தியது. உயர்பதவிக்கான வினைத்திறன்காண் பரீட்சையும் 1995 திசெம்பரில் நடத்தப்பட்டது.

## முகாமைத்துவக் கணக்காய்வு

1995 இல் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களம் அதனது வேலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க வங்கியின் பல்வேறுபட்ட திணைக்களங்களில் கணக்காய்வுகளை மேற்கொண்டது. இக்கணக் காய்வுகளின்போது முறைசார்ந்த கணக்காய்வு மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடு என்பன முக்கியமாக வலியுறுத்தப்பட்டன.

வழமையான கணக்காய்வு தொழிற் பாடுகளுக்கு மேலதிகமாக திணைக்களம் வங்கி முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்பட்ட பல சிறப்பு ஆய்வுகளையும் அளவீடுகளையும் மேற்கொண்டது. இவ்வாய்வுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியருந்தன.

அ. வங்கியின் ஓட்டுநர்களுக்கான எண்ணிக்கை பற்றிய ஆய்வு.

ஆ. சிற்றூழியர் தரங்கள் 1 மற்றும் 2 இலுள்ள சிற்றூழியர்களுக்கான எண்ணிக்கை பற்றிய ஆய்வு.

இ. வங்கியின் தொலைபேசி தொழிற்பாட்டாளருக்காக பதவி வெற்றிடங்களை நிர்ணயித்தல்.

ஈ. வங்கியில் அலுவலர் தேவைகளை மதிப்பிடல்.

உ. கிராமிய கொடுகடன் திணைக்களத்தின் காலி மாவட்ட சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் செயற்றிட்ட அலுவலகத்தின் நடவடிக்கைகளை பரீட்சித்தல்.

ஊ. மத்திய வங்கி ஆராய்ச்சி நூலகத்தினது நூல்களின் எண்ணிக்கை சரிபார்க்கப்பட்டமை.

எ. பாதுகாப்புப் பணித்திணைக்களத்தின் துப்பாக்கி மற்றும் தோட்டா எண்ணிக்கைச் சரிபார்ப்பு.

## பணிமனை

மத்திய வங்கிப் பணிமனையில் வழமையான பேணல் மற்றும் அதனை ஒழுங்காக வைத்திருத்தல் என்பனவற்றிற்கு மேலதிகமாக, 1995 இல் பணிமனைத் திணைக்களம் பின்வரும் கட்டுமானச் செற்றிட்டங்களிலும் ஈடுபட்டிருந்தது.

### தலைமை அலுவலகத்தை விரிவுபடுத்தல்

1994 ஒகத்தில் தொடங்கிய தலைமை அலுவலகத்தை விரிவாக்குவதற்கான கட்டுமான வேலைகள் 1995 இலும் தொடர்ந்தது. விரிவாக்க அலுவலகம் 1997 இறுதிக்கு முன்னர் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கட்டடத்தின் வேலை முடிவடைந்ததும் வங்கி தற்போழுது வாடகைக் கட்டடங்களில் அமைந்துள்ள அதன் அனைத்து திணைக்களங்களுக்கும் இதில் இடமளிக்கக்கூடியதாக இருக்கும்.

### இராசகிரியாவில் புதிய இருமாடிக் கட்டடம்

கிராமிய வங்கி அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் தங்கியிருந்து பயிற்சி பெறுவோருக்கு மாற்று தங்குமிடங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுவரும் ஏறத்தாழ 7,725 ச.அடி மொத்த தளப்பரப்பைக் கொண்ட இக்கட்டடம் முடிவுறும் இறுதிக்கட்டத்தில் உள்ளது.

### கதிர்காம யாத்திரிகர் தங்குமிடம்

கதிர்காமத்தில் 20 அறைகளைக் கொண்ட உத்தேச யாத்திரிகர் தங்குமிடத்தின் கட்டுமானத்துடன் தொடர்பான ஆரம்பவேலைகள் 1995 இல் மேற்கொள்ளப்பட்டன.

### நலன்புரி

கடந்த காலங்களைப் போன்று 1995 இல் நலன்புரித் திணைக்களம் மத்திய வங்கி ஊழியர்களுக்கு வீடமைப்புக் கடன் திட்டம், அலுவலர் நன்மைகள் திட்டம், ஊர்திகள் கடன் திட்டம், வைத்திய நன்மைகள் திட்டம், ஊழியர் சேமநிதியக் கடன் திட்டம், மத்திய வங்கி உணவகம், மத்திய வங்கி வைத்திய நிலையம், புகைவண்டி, பேருந்து பருவ காலச்சீட்டு போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கான 75 சதவீதக் கொடுப்பனவு போன்ற நலன்புரி வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது.

1995 இல் மேற்குறிப்பிட்ட நலன்புரி வசதிகளில் சில, குறிப்பிடத்தக்களவிற்கு விரிவாக்கப்பட்டன.

மத்திய வங்கியின் உணவகம், ஊழியர்களுக்கு உதவிக் கொடுப்பனவினைக் கொண்ட உணவினையும், குடிபானத்தையும் தொடர்ந்தும் வழங்கியதுடன் வங்கியின் அலுவல்சார் நிகழ்ச்சிகளில் உணவுபரிமாறல், பணிகளையும் மேற்கொண்டது.

அனைத்து வேலைநாட்களிலும் அலுவலக நேரத்தில் வங்கியின் வைத்திய நிலையம் வைத்தியர் ஒருவரைக் கொண்டுள்ளது. வைத்திய நிலைய மருத்துவப்பிரிவு தகமை பெற்ற மருத்துவத்தாதியையும் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரையும் உள்ளடக்கியுள்ளது. மத்திய வங்கி, மருந்துச்சாலையில் பல அத்தியாவசிய மருந்துகள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவை செலவு விலைகளில் ஊழியர்களுக்கு விற்கப்படுகின்றன.

### பாதுகாப்புப்பணிகள்

1995 இல் பாதுகாப்புத் திணக்களம் மத்திய வங்கியின் முதன்மைக் கட்டடம், இராசகிரியாவிலுள்ள கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயற்சிக் கல்லூரிக் கட்டடம் வரையறுக்கப்பட்ட கார்க்கோபோட், சிலின்கோ, சாலிமார் ஆகிய கட்டடங்களில் அமைந்துள்ள திணைக்களங்கள் என்பனவற்றிற்குப் பாதுகாப்புப் பணிகளை வழங்கியது. அத்துடன் பாதுகாப்பு வலையமைப்பு அநுராதபுரம், மாத்தறை, மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள பிரதேச அலுவலகங்களையும் அதேபோன்று களனி, லயாட்ஸ் புரோட்வேயிலுள்ள களஞ்சியசாலைகள், கதிர்காமச் சுற்றுலாவிடுதி, நுவரெலியா விடுமுறை தங்குமிடம், கண்டி கட்டடப்பகுதி, புதிய வங்கி கட்டடப்பகுதி என்பனவற்றையும் உள்ளடக்கியிருந்தது. ஆளுநரின் வதிவிடத்திற்கும் மூத்த துணைஆளுநரின் வதிவிடத்திற்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆளுநருக்கும் மத்திய வங்கிக்கு வருகைதரும் வெளிநாட்டுப் பேராளர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் பணிக்கும் திணைக்களமே பொறுப்பாகவிருந்தது.

நாணயமும் தங்கமும் கொண்டு செல்லப்படும்போது காவல்துறையின் உதவியுடன் திணைக்களம் பாதுகாப்பினை வழங்கியது.

திணைக்களங்களிலுள்ள பாதுகாப்பு ஆளணியினரின் திறமையையும் அறிவாற்றலையும் அதிகரிக்கும் பொருட்டு இவ்வாண்டுக்காலத்தில் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்பட்ட பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் கொழும்பு தீயணைக்கும் படையினரால் நடத்தப்பட்ட தீ தடுப்பு பயிற்சி நெறிக்கும் உதவி வழங்கியது.

### ஆளணி

1995 இல் ஆளுநர் எச். பீ. திசநாயக்க பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

(1) மலேசியாவில் நடைபெற்ற 32வது நிறைவேற்றுக் குழுக் கூட்டம், அப்ரகாவின் 10வது ஆளுநர்கள் கூட்டம்.

(2) ஐக்கிய அமெரிக்க வாசிங்டனில் நடைபெற்ற உலகவங்கி/பன்னாட்டு நாணய நிதியம் ஆண்டுக் குழுக் கூட்டங்கள்.

(3) பிலிப்பைன் மணிலாவில் நடைபெற்ற 30வது சியசன் ஆளுநர்களின் மாகாநாடு.

(4) யமேக்காவிலுள்ள கிங்ஸ்ரணில் நடைபெற்ற பொதுநலவாய நிதி அமைச்சர்கள் கூட்டம்.

**நியமனங்கள்**

(1) நிதித்திட்டமிடல் இன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சுக்கு செயலாளராக கடமையாற்றுவதற்கென விடுவிக்கப்பட்ட மூத்த துணை ஆளுநராக இருந்த திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன 1995 நவெம்பர் 15ஆம் நாளிலிருந்து மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படடார்.

(2) திரு. எஸ். ஈஸ்பரதாசன், திரு. பீ. அமரசிங்க ஆகியோர் 1995 பெப்புருவரி 9 ஆம் நாளிலிருந்து துணை ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.

(3) திரு. எஸ். பட்டிவிதான 1995 பெப்புருவரி 16ஆம் நாளிலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(4) பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராக இருந்த முனைவர் எல். எல். குணரட்ன ஆளுநரால் குறித்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கு பொறுப்பான சிறப்பு அலுவலராக 1995 ஒகத்து 2ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

(5) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளராக இருந்த திரு. ஆர். ஏ. ஜெயதிஸ்ஸ 1995 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(6) முதன்மைத் துணைக் கணக்காளராக இருந்த திரு. ஏ. சண்முகசாமி 1995 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நிமிக்கப்பட்டார்.

(7) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளராக இருந்த முனைவர் டி. எஸ். விஜயசிங்க 1995 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து புள்ளி விபரத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளாராக நியமிக்கப்பட்டார்.

(8) பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் துணைப் பணிப்பாளராக இருந்த முனைவர் யு. விதானபத்திரன 1995 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து மேலதிகப் பதில் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

(9) நிதியியல்துறை கண்காணிப்புப் பிரிவின் துணைத் திணைக்களத் தலைவராக இருந்த திரு. வை. எம். டபிள்யூ. பி. வீரசேகர 1995 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து மேலதிக பதில் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

(10) தகவல் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த திரு. டி. போயகொட 1995 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து கிராமிய வங்கித் தொழில் அலுவலகப் பயிற்சிக் கல்லூரியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(11) வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக இருந்த திரு. ஜே. ஈ. டீ. கருணாரட்ன 1995 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து தகவல் திணைக்களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(12) பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக இருந்த திரு. எம். இராமநாதன் 1995 ஒகத்து 2 ஆம் நாளிலிருந்து நிறுவனத் திணைக் களத்தின் பதில் மேலதிக பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(13) நிறுவனத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக இருந்த திரு. எம். எஸ். சிறிபால 1995 ஓகத்து 2 ஆம் நாளிலிருந்து ஊழியர் சேம நிதிய பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(14) வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளராக இருந்த திரு. எம். டி. டி. குணதிலக்க 1995 செத்தெம்பர் 14 ஆம் நாளிலிருந்து ஊழியர் சேமநிதிய பதில் மேலதிக கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(15) துணைச் செயலாளர் (சட்டப்பிரிவு) ஆகவிருந்த திருமதி. பி. ரீ. பெரேரா 1995 செத்தெம்பர் 14 ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(16) பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தின் துணைப் பணிப்பாளராக இருந்த முனைவர் ஏ. ஜி. கருணாசேன 1995 செத்தெம்பர் 14 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(17) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளராக இருந்த முனைவர் பி. பீ. ஜயசுந்தர 1995 செத்தெம்பர் 14 ஆம் நாளிலிருந்து பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(18) ஊழியர் சேமலாப நிதியத்திணைக்கள பதில் மேலதிக கண்காணிப்பாளராக இருந்த திரு. எம். எஸ். சிறிபால 1995 செத்தெம்பர் 19 ஆம் நாளிலிருந்து நலன்புரித் திணைக்களத்திற்கு பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## ஓய்வுபெறல்/பதவி விலகல்

திணைக்களத் தலைவர் முனைவர் ஏ. சி. ரன்தெனி 1995 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து பதவி விலகினார்.

நிறைவேற்றுப் பணிப்பாளராக இருந்த முனைவர் எல். ஈ. என். பர்னாந்து 1995 ஏப்பிறல் 3 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து பதவி விலகினார்.

துணை ஆளுநர் முனைவர் எஸ். ரி. ஜி. பர்னாந்து 1995 செத்தெம்பர் 19 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

நிறைவேற்றுப் பணிப்பாளர் முனைவர் டபிள்யூ. எட்டியாராச்சி 1995 செத்தெம்பர் 19 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

மத்திய வங்கி ஆளுநர் திரு. எச். பீ திசாநாயக்க 1995 நவெம்பர் 15 இல் பதவி விலகினார்.

மூத்த துணை ஆளுநர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன 1995 நவம்பர் 15 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

## விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

1995 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையிலுள்ள அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றுக்கு விடுவிக்கப்பட்டனர்.

முனைவர் டி. ஜெ. ஜி. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராகவும் பணிப்பாளராகவும் கடமையாற்றுவதற்காக நிதி அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டார்.

திரு. டபிள்யூ. எ. டி. ஈ. வீரசிங்க, திரு. சி. டி. எஸ். ஜயவர்த்தன ஆகியோர் நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டனர்.